Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 312 பிலவ வருடம், ஆவணி மாதம் 09ஆம் திகதி புதன்கிழமை
(25.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 15, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

“ அன்புக்குரிய மாணவர்களே, பெற்றோரையும் ஆசிரியரையும் வணங்குங்கள். அரசியல்வாதிகளை வணங்கவேண்டிய அவசியம் கிடையாது. ”

- மங்கள சமரவீர
26.10.2015



# மறைந்தார் மங்கள சமரவீர!

## கொரோனா தொற்றுக்குள்ளாகி தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தபோது மரணம்

•நா.தினுஷா

இலங்கை அரசியலில் முக்கிய உயர்பதவிகளை வகித்தவரும், தமிழ்பேசும் மக்களுக்காக துணிச்சலாக குரல்கொடுத்தவரும், முற்போக்கு சிந்தனாவாதியுமான மங்கள சமரவீர (65 வயது) நேற்று காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் மங்கள மரணித்தார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் நீண்டகாலம் அங்கம் வகித்த பெருமையைக்கொண்ட மங்கள சமரவீர, தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் மாறாத நிலைப்பாட்டை இறுதிவரை கொண்டிருந்ததுடன், தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுமிருந்தார். சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் ஆதரவை எதிர்பார்க்காமல் உண்மையை உள்ளபடி எடுத்துப் பேசியவர் மங்கள.

2005 ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பிரசாரப் பிரிவுத் தலைவராக தொழிற்பட்டு மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு வித்திட்டார். இத்தேர்தல் வெற்றிக்காக விடுதலைப் புலிகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ பணம் கொடுத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்கில் தமிழர்கள் வாக்களிக்காமல் செய்ததாக பின்னர் அவர் மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

ராஜபக்ஷக்களுடன் நெருக்கமாக இருந்து விலகிய பின்னர் மீண்டும் அவர்களுடன் இணைய நிறைய வாய்ப்புகளும் அழைப்புகளும் வந்தபோதும் அதை மங்கள ஏற்கவில்லை. 02≫

## மங்களவின் பங்களிப்பு விலைமதிப்பற்றது

### ஜனாதிபதி இரங்கல்



முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். 02≫

## சிரேஷ்ட தலைவரை நாடு இழந்துவிட்டது

### பிரதமர் இரங்கல்



சிரேஷ்ட தலைவர் ஒருவரை இலங்கை இழந்துவிட்டதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மங்கள சமரவீர நாட்டை நேசித்தவர் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். 02≫



மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பூதவுடல் தகனத்துக்காக பொரளை கனத்த மயானத்துக்கு நேற்று மாலை எடுத்துவரப்பட்டபோது...
(படப்பிடிப்பு: கிறிஷான் காரியவசம்)

## புரட்சிகர நண்பரை பிரிந்திருக்கிறேன்

### சஜித் கவலை



முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளை மறக்கமுடியாது என்றும் புரட்சிகர நண்பரை இழந்திருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்... 02≫

## மங்களவின் மறைவு நாட்டுக்கு பேரிழப்பு

### ரணில் அனுதாபம்



மங்கள சமரவீரவின் மறைவு நாட்டுக்கு பேரிழப்பாகும் - என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எம்.பி. தெரிவித்துள்ளார். 02≫

## போராளி மங்களவுக்கு கண்ணீருடன் பிரியாவிடை

### மனோ வேதனை



“வெள்ளை வேன் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு! 2007இல் நாடாளுமன்றத்தில் அரசு பக்கமிருந்து எதிரணி பக்கம் நீங்கள் வந்தபோது நான் அனுப்பிய... 02≫

## மங்களவின் அரசியல் பயணம் (1989 - 2020)



•ஆர். சனத்

- ★ 1983 - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளராக நியமனம்.
- ★ 1989இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி சார்பில் களமிறங்கிய மங்கள சமரவீர - 11,971 விருப்பு வாக்குகளைப்பெற்று, நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். (1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பின்னர் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலும் 6 ஆண்டுகளுக்கு சர்வஜன வாக்கெடுப்புமூலம் நீடிக்கப்பட்டதால் 89இல்தான் தேர்தல் நடைபெற்றது. அதுவும் விகிதாசார விருப்பு வாக்கு அடிப்படையில்.)
- ★ நாடாளுமன்ற அரசியலை சிறப்பாக முன்னெடுத்த மங்கள சமரவீர, தனது ஆளுமையால் குறுகிய காலப்பகுதியில் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் நம்பிக்கையையும் வென்றெடுத்தார்.
- ★ 1994 ஒகஸ்ட் 16ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலை பரந்துபட்ட கூட்டணி அமைத்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்கொண்டது.
  அந்தவகையில் மக்கள் கூட்டணியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் களமிறங்கிய மங்கள சமரவீர, 61,574 விருப்பு வாக்குகளைப்பெற்று 2ஆவது முறையும் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.
  இத்தேர்தலில் வெற்றிபெற்றதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால தொடர் ஆட்சிக்கு சந்திரிக்கா தலைமையில் சுதந்திரக் கட்சி முற்றுப்புள்ளி வைத்தது.
- ★ 1994இல் சந்திரிக்கா தலைமையில் அமைந்த ஆட்சியில், மங்கள சமரவீர அமைச்சரவையில் இடம்பிடித்தார். தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. துடிப்புடன் செயற்பட்ட அவர், அத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வித்திட்டார்.
- ★ 2000 ஒக்டோபர் 10இல் நடைபெற்ற தேர்தலிலும் சந்திரிக்கா தலைமையிலான மக்கள் கூட்டணியே வெற்றிபெற்றது. மாத்தறையில் போட்டியிட்ட மங்களவும் வெற்றிநடை போட்டார். அமைச்சரவையிலும் இடம்பிடித்தார்.
- ★ தேர்தல் நடைபெற்று 11 மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 2001 டிசம்பர் 05ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெற்றது. சந்திரிக்கா அணி தோல்வி கண்டது. மாத்தறை மாவட்டத்தில் மங்களவின் வெற்றி தொடர்ந்தது.
- ★ 2001இல் நாடாளுமன்றத்தில் மிக முக்கிய பதவிகளுள் ஒன்றாகக் கருதப்படும் எதிரணி பிரதம கொறடா பதவியை வகித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளராகவும் செயற்பட்டார். ஆளுங்கட்சிக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார்.
- ★ 2004 ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. 2004 ஜனவரி 20ஆம் திகதி சந்திரிக்கா தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (வெற்றிலை சின்னம்) உதயமானது. ஜே.வி.பியும் கூட்டணியில் அங்கம் வகித்தது. 02≫

## நாட்டை முடக்குமாறு கடிதம் எழுதிய விவகாரம்:

## விமல், வாசு, கம்மன்பில ஆகியோருக்கு அமைச்சரவையில் நடந்தது தெரியாதா?

### பேச்சாளர் விளக்கம்: அரசு நோய்வாய்ப்படவில்லையெனவும் தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

நாட்டை முடக்குவதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவையில் நாடு முடக்குவது குறித்து இறுதியாக கலந்துரையாடப்பட்டபோது கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்காக உதய கம்மன்பில, விமல் வீரவங்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய... 02≫

## நாட்டில் முஸ்லிம்கள் 10 வீதம் கொரோனாவால் இறப்போர் 40 வீதம்;

### விடயமறிந்தும் தடுப்பூசி பெறாதிருப்பது தற்கொலைக்கு ஒப்பானது என்கிறார் அமைச்சர் அலி சப்ரி



•சாய்ந்தமருது நிருபர்

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் விகிதாசாரம் சுமார் 10 வீதமாக இருக்கின்ற நிலையில், கொரோனா தொற்றினால் மரணிப்பவர்களுள் சுமார் 40 வீதமானோர் முஸ்லிம்களாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும் - என நீதி அமைச்சர்... 02≫

## கொவிட் நிதியத்துக்கு அரச ஊழியர்களின் சம்பளத்தைப் பெறும் தீர்மானமேதுமில்லை

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

கொவிட் நிதியத்திற்காக அரச துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்... 02≫

# கொரோனா பரவல் வீதத்தில் இலங்கைக்கு 12ஆம் இடம்

(யோ.தர்மராஜ்)

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கொரோனா மரணங்கள் காரணமாக உலகளவில் இலங்கை 12ஆவது இடத்திலும் ஆசிய அளவில் 7ஆவது இடத்திலும் உள்ளது.

நாட்டில் நேற்றுமுன்தினம் பதிவாகிய 194 மரணங்களுடன் இலங்கை உலக மற்றும் ஆசிய அளவில் இவ்வாறான இடங்களுக்கு முன்னேறியுள்ளது.

கொரோனா தொற்றின் தீவிரத்தால் தற்போது நாளொன்றுக்கு 4 ஆயிரத்துக்கு அதிகமான நோயாளர்களும் 190இற்கு மேற்பட்ட மரணங்களும் பதிவாகிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் நாட்டில் 4 ஆயிரத்து 355 கொரோனா நோயாளர்களுடன் மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 94 ஆயிரத்து 355 ஆக உயர்வடைந்துள்ளது. அத்தோடு, 194 மரணங்களுடன் மொத்த மரணங்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 560 ஆக உயர்வடைந்துள்ளது.

## மறைந்தார் மங்கள சமரவீர!...

மங்கள சமரவீரவின் தந்தை மகாநாம சமரவீர ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர். 1952 இல் அக்கட்சியில் போட்டியிட்டு மாத்தறை தொகுதியில் வெற்றியீட்டிய அவர், 1956இல் பண்டாரநாயக்காவுடன் இணைந்துகொண்டார்.

1965ஆம் ஆண்டுவரையில் அவர் மாத்தறை தொகுதியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தார். மங்களவின் தாயாரும் ஓர் அரசியல்வாதி. மாத்தறை நகர சபையில் 1950களில் உறுப்பினராக இருந்து பொது வாழ்க்கையில் பங்கெடுத்தவர்.

மங்கள சமரவீரவின் குடும்பத்தைப் பற்றி பலரும் அறியாத ஒரு சுவாரஸ்யம். அவர்கள் வல்வெட்டித்துறையுடன் கொண்டிருக்கும் தொடர்பு. அதாவது, பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த ஆழிக்குமரன் ஆனந்தன் மங்களவுக்கு மாமா முறை. அவருடைய அத்தையின் கணவர்.

சிங்கள - தமிழ் கலப்புத் திருமணங்களுக்கு கடுமையான எதிர்ப்பு நிலவிவந்த ஒரு கால கட்டத்தில் மங்களவின் தந்தையின் சகோதரி மானெல், வல்வட்டித்துறை தமிழரான வழக்கறிஞர் குமார் ஆனந்தனை மணம் புரிந்தார்.

தான் ஒரு மாற்றுப் பாலீர்ப்பாளர் என்ற விடயத்தை எவ்வித மனத் தடைகளும் இல்லாமல் அதனை எப்போதும் பகிரங்கமாகக் கூறும் துணிச்சலை அவர் கொண்டிருந்தார்.

1994 – 2000 சந்திரிக்கா அரசாங்கத்தில் தொலைத்தொடர்பு அமைச்சராக பதவி வகித்த அவர், அந்த அரசாங்கத்தின் செல்நெறியை தீர்மானிப்பதில் திரை மறைவிலிருந்து ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்திருந்தார்.

1997ஆம் ஆண்டில் நாட்டின் தொலைத்தொடர்புத்துறை தனியார்மயமாக்கப்பட்ட மாற்றமே அடுத்து வந்த வருடங்களில் இலங்கையில் தொடர்பாடல்துறையில் ஏற்பட்ட மாபெரும் புரட்சிக்கு வழிகோலியிருந்தது. அதில் மங்கள வகித்த முக்கியமான பாத்திரத்தை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

1990களில் மாத்தறை பிரதேசத்தின் முகத் தோற்றத்தையே மாற்றியமைக்கும் அளவுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார் மங்கள. ஆனால், அந்த மாவட்டத்தில் ஒருபோதும் தேர்தல்களில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளை அவரால் பெற முடியாதிருந்தது. எவ்வாறாயினும் நாடாளுமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்று முக்கிய அமைச்சுப் பதவிகளை அவர் அலங்கரித்து வந்திருந்தார்.

இறுதியாக நடந்த பொதுத் தேர்தலில் மங்கள போட்டியிடவில்லை. ஆனால், பொதுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

உள்நாட்டுப்போர் முடிக்கப்பட்ட விதம் குறித்து கடுமையான எதிர்கருத்துகளை கொண்டிருந்த மங்கள, உலக நாடுகளின் மூத்த இராஜதந்திரிகளுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அஸ்கிரிய பீடத்தின் உயர்மட்ட தேரர் ஒருவர் முஸ்லிம்களின் வியாபார ஸ்தாபனங்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற விதத்தில் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்து, கடும் இனவாதத் தொனியில் கருத்துகளை முன்வைத்த பொழுது, அதற்கு எதிராக முதலாவது எழுந்த குரல் மங்களவுடையதென்பது குறிப்பிடத்தக்கது..

## புரட்சிகர நண்பரை...

பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மங்கள சமரவீரவின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசியலில் உருவான முற்போக்கு அரசியல்வாதி என குறிப்பிடக்கூடிய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு குறித்த செய்தி எங்களை அதிர்ச்சியிலும் கடுமையான சோகத்துக்கும் உள்ளாக்கியது.

மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட தனது அரசியல் பயணத்தின்போது தான் நம்புகின்ற கோட்பாட்டுக்கமைவாக எவ்வாறான தடைகளுக்கு மத்தியிலும் எதிர்நீச்சல் போடும் அரிதான அரசியல்வாதி மங்கள சமரவீர எமது இதயங்களில் அழிக்க முடியாத ஒரு சரிதையாவார். நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக மட்டுமன்றி மனங்கவர்ந்த நண்பராகவும் அவர் பற்றிய மறக்க முடியாத பல நினைவுகள் உள்ளன.

எப்பொழுதும் இனவாதத்துக்கு எதிராக கொள்கை ரீதியாக செயற்பட்ட அவர், தேசிய நல்லிணக்கம் தொடர்பில் தொடர்ச்சியாக முன்னின்ற ஒருவராவார்.

கடந்த ஆட்சியின்போது அன்னாருக்கும் எங்களுக்கும் இடையேயான நட்பு மிகவும் மேம்பட்டிருந்ததுடன், அன்னார் நிதி அமைச்சராக செயற்பட்ட காலத்தின்போது எனது அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அளப்பரிய ஒத்துழைப்பை எங்களுக்கு வழங்கினார். எனது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் ஆழமான அறிவு மற்றும் பாரிய நோக்கு அன்னாரிடம் காணப்பட்டது.

2019 ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியின் வேட்பாளராக என்னை முன்நிறுத்துவதற்கான போராட்டத்தின் முன்னோடிகளில் மங்கள சமரவீர முதன்மையானவர். அதற்கான அன்னாரின் அர்ப்பணிப்பு மற்றும் போராட்டம் வாழ்நாளில் எங்களால் மறக்க முடியாது. அன்னார் ஆட்களை இணைத்துக்கொண்ட அரசியலிலும் பார்க்க கொள்கை ரீதியான அரசியல்வாதியாகக் காணப்பட்டார். அதற்காக அவர் போராட்டங்களில் ஈடுபட்டார். அதற்காக அவர் முன்நின்றார்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்ற இரண்டு தூண்களின் மீது ஸ்தாபிக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தூரநோக்குடன் அவர் செயற்பட்டார். நிதி அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் அது தொடர்பில் தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது. சர்வதேச ரீதியில் அவருக்கிருந்த அதிக தொடர்புகள் வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் அத்தொடர்புகளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்ட ஒருவருமாவார்.

சம்பிரதாய அரசியல்வாதியாக இல்லாமல் தனது அரசியல் நடவடிக்கைகளின்போதுகூட நவீனத்துவத்தை மட்டுமன்றி புதிய சம்பிரதாயங்களையும் அதில் இணைத்துக் கொண்டார். அப்போதைய அரசாங்கத்தின் கீழ் ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைத்து அதற்கு புதுவடிவை வழங்கியதுடன், அப்போது நகர அபிவிருத்தி தொடர்பில் பயமின்ற பல முடிவுகளை எடுத்தவருமாவார்.

தான் அமைச்சராக கடமை புரியும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அந்த எல்லா அமைச்சுகளுக்கும் விசேட அம்சங்களை நிலை நிறுத்துவதற்கு அவருக்கு முடியுமாயின. தான் நம்புகின்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியாக, பயமின்றி புரட்சிகர முடிவுகளை எடுத்த மங்கள சமரவீர, அவ்வாறான அனைத்துத் தீர்மானங்களின் ஊடாகவும் அவர் நல்லிணக்கத்தைக்கொண்ட நாட்டை கட்டியெழுப்புவதற்கு தனது பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றிய ஒருவராவார்.

மூன்று தசாப்த கால இலங்கை அரசியலில் மங்களவின் வகிபாகம் அன்னாரது முற்போக்கு மற்றும் புரட்சிகர அம்சங்களைக் கருத்திற்கொண்டு பேசப்பட வேண்டியதொன்றாகும். சர்வதேச மட்டத்தில் குறிப்பிடத்தக்க தலைவர்கள் இந்நாட்டுக்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் மங்கள சமரவீர மறைந்துள்ளார்.

அன்னாரின் மறைவினால் கவலையடைந்திருக்கும் மங்கள சமரவீரவின் அனைத்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அழகான இலங்கையை கட்டியெழுப்புவதற்காக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்ட புரட்சிகர நண்பரே உங்களுக்கு உன்னதமாக பரிநிர்வாணம் கிட்ட பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## போராளி மங்களவுக்கு...

இக்குறிப்பு ஞாபகமிருக்கின்றதா? மீண்டும் சந்திக்கும்வரை கண்ணீருடன் விடைபெறு நண்பா” - என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மிக உருக்கமான ட்விட்டர் பதிவை தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

2005-2009 வரை, கொழும்பில் அடைக்கலம் புகுந்திருந்த வடக்கு, கிழக்கு தமிழர்கள், அதிகாரமிக்க வெள்ளை வேன் கடத்தல் பயங்கரவாத கும்பலினால் “முனிசிபலிட்டி நாய்களை” பிடிப்பதைபோல் பிடித்து, கடத்தப்பட்டு, கொல்லப்பட்டு, பற்றைகளில் சடலங்களாக வீசப்பட்டுக்கொண்டிருந்த காலம். அதன்போது, கொழும்பு எம்.பி.யாக நான் “வருவது வரட்டும்” என போராடிக்கொண்டிருந்த வேளை, மங்கள சமரவீர எனக்கு இரகசியமாக செய்தி அனுப்பினார்.

மங்கள சமரவீர ஊடக அமைச்சராக இருந்த வேளை, “தானும், ஸ்ரீபதி சூரியராச்சியும் அரசில் இருந்து விலக உள்ளதாகவும், அதுபற்றி தான் ஜனாதிபதிக்கு எழுதும் கடிதத்தில், மனித உரிமை மீறல் வெள்ளை வேன் கடத்தலையும் ஒரு காரணமாக கூறவுள்ளதாகவும், அதுபற்றிய விபரங்களை தர முடியுமா?” என கேட்டிருந்தார்.

மங்கள சமரவீரவின் இந்த இரகசிய செய்தி, கொலைக்கார சூழலில், கடத்தல்கார கடலில் தத்தளித்து, ஒரு சிறு துரும்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு படு உற்சாகத்தை தந்தது. அவருக்கு தகவல்களை அனுப்பினேன்.

மங்கள சமரவீர சொன்னதைபோல், அரசிலிருந்து விலகும் தீர்மான காரணங்களை ஜனாதிபதிக்கு தெரிவித்த கடிதத்தில் வெள்ளை வேன் கடத்தல், மனித உரிமை மீறல் என்பதையும் காரணமாக கூறியிருந்தார். பின்னர் 2007 ஜூன் 15ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் அரசு பக்கம் இருந்து எதிரணி பக்கம் அவர் வந்து அமர்ந்தார்.

அவர் வரப்போவதை அறிந்த நான் சில நிமிடங்களுக்கு முன், “வெள்ளை வேன் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு”! என்று என் கையால் எழுதிய சிறு குறிப்பை அவருக்கு அனுப்பினேன். அதை வாசித்து என்னை பார்த்து மங்கள சமரவீர கையை காட்டி, சிரித்தது இன்னமும் என் கண்களில் நிழலாடுகிறது.

மங்கள சமரவீர கட்சி மாறியது, எதிரணியில் இருந்து பதவி, பவிசு வேண்டி, அதிகாரம் உள்ள ஆளும்கட்சிக்கு அல்ல என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்று “தேசபக்த” யுத்தம் என்று போர் நடந்துகொண்டிருந்த வேளையில், யுத்த களத்துக்கு வெளியேயும் தமிழர் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், பல தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அதே அரசில் அமைச்சர்களாக இருந்த வேளையில், ஏனைய பல எதிரணி தமிழ் அரசியல்வாதிகள் நாட்டை விட்டு ஓடிப்போகவேண்டிய நிலைமை ஏற்பட்ட வேளையில்தான், அரசிலிருந்து மங்கள தன் நண்பன் ஸ்ரீபதி சூரியராச்சியுடன் தைரியமாக பதவி விலகினார். அதனால்தான் எம் பக்கத்தை நோக்கிய மங்கள சமரவீரவின் வருகை எனக்கு அன்று பெரும் உற்சாகத்தை தந்தது.

மங்கள சமரவீர கடைசிவரை இந்நாட்டை பல்லின, பன்மத, பன்மொழி நாடாகவே கருதினார். இந்த எண்ணம், நாட்டின் அதிகாரபூர்வ கொள்கையாக மாற வேண்டும் என்பதே அவரது அவா.

ஆகவே, அவரது எதிர்பாரா மறைவுக்கு முந்தைய அவரது வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைந்து அவரது ஆத்மா சாந்தியடைய, “நாம் அனைவரும் இலங்கையர், இந்நாடு ஒரு பன்மைத்துவ நாடு” என்ற கொள்கையை நிஜமாக்க நாம் உழைக்க வேண்டும்.

## நாட்டில் முஸ்லிம்கள்...

அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தடுப்பூசியை முஸ்லிம்கள் அனைவரும் செலுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது நாட்டில் இதுவரை ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இவர்களில் ஒரு வீதமானோர் மாத்திரமே கொவிட் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டவர்களாவர்.

அதாவது இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் 63 பேர் மாத்திரமே இறந்துள்ளனர். இவர்களுக்கு நீண்ட கால நோய்களும் இருந்துள்ளன. ஏனைய 99 வீதமானோர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாதவர்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் இருந்து நாம் விளங்கிக்கொள்வது யாதெனில், கொவிட் தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதன் மூலம் எமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதாகும்.

மருத்துவம் என்பது நோய் நிவாரணம் பெற இறைவன் காட்டிய வழிமுறையாகும்.

இன்று எம் கண்முன்னே எமது முஸ்லிம் சகோதர, சகோதரிகள் பலர் தினமும் கொவிட் தொற்றினால் மரணித்து வருகின்றனர். முஸ்லிம்கள் நாற்பது, ஐம்பது பேரளவில் கடந்த சில நாட்களாக உயிரிழந்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் என தெரிய வருகிறது. சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் இதனை என்னிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தடுப்பூசி ஏற்றுக்கொள்வது பாதகமானது என்ற தவறான கருத்துக்கள் முஸ்லிம்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கிறது. இதனால் முஸ்லிம்கள் பலர் தடுப்பூசி பெற்றுக் கொள்ள பின்வாங்குகின்றனர். இது குறித்து சுகாதார அமைச்சு மற்றும் பொலிஸ் தரப்பினர் என்னிடம் கவலை வெளியிட்டுள்ளனர்.

தடுப்பூசி செலுத்திக் கொள்வது ஹராமான (தடுக்கப்பட்ட) விடயமல்ல. உலகில் உள்ள 51 முஸ்லிம் நாடுகளும் கொவிட் தடுப்பூசியை அங்கீகரித்து, தமது மக்களுக்கு செலுத்தி வருகின்றன. சில அரபு நாடுகளில் பிள்ளைகளுக்குக் கூட தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. எமது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா மற்றும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர் களும் கூட தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்டதே இக்கொவிட் தடுப்பூசியாகும்.

இதில் எவ்விதமான பாதக விளைவுகளும் இல்லை என உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் இது விடயத்தில் எவரும் எவ்வித சந்தேகமும் அச்சமும் கொள்ளத்தேவையில்லை.

எனவே, உடனடியாக அனைத்து முஸ்லிம்களும், குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்று, தம்மையும் தமது குடும்பத்தினரையும் கொரோனா மரணத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதுடன் நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாக வேண்டிக்கொள்கின்றேன்.

விடயங்களைத் தெரிந்து கொண்டும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதிருப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பானது என்பதை புரிந்து கொள்ளுங்கள்- என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## நாட்டை முடக்குமாறு...

அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேறியதனாலேயே அந்த விடயம் குறித்து அவர்கள் தெரியாதுபோனதாக அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத் துறை அமைச்சருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது, நாட்டை முடக்குமாறு பங்காளி கட்சிகளினால் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் குறித்து ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் எந்தவொரு கூட்டணி அரசியலுக்குள் பல்வேறு முரண்பாடுகள், பல்வேறு நிலைப்பாடுகள் மற்றும் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படும். அதன்படி, இது எங்களுக்கு புதியதுமல்ல. இறுதியுமானதல்ல. ஆனால், அரசின் உள்ளக விவகாரங்களை பேசுமளவிற்று அரசாங்கம் நோய் வாய்ப்படவில்லை.

அத்தோடு, அரசுக்குள் ஏற்படுகின்ற விவாதங்களை நாங்கள் முடக்கவுமாட்டோம். இதனால், பல்வேறு விவாதங்கள் இடம்பெறும்.

இந்த நிலையில், நாடு முடக்குவதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவையானது இரவு 10.10 மணி வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டமானது இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதனால், உதயகம்மன்பில, விமல் வீரவங்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய அமைச்சர்கள் கட்சித் தலைவர்கள் கூட்டம் தாமதமாகுவதால் இரவு 9 மணியளவில் அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையிலேயே நாடு முடக்கப்படுவது குறித்த விடமானது இறுதியாக கலந்துரையாடப்பட்டது. இந்த முடிவுகள் குறித்து அவர்களுக்கு அன்றிரவு தெரிவிக்கக் கூடிய நிலைமை இருக்கவில்லை. கட்சித் தலைவர்கள் கூட்டத்தின போதே நாடு முடக்கக் கோரும் தீர்மானத்தை அவர்கள் எடுத்துள்ளனர். எனினும், இது குழப்பமடைய வேண்டிய தேவையில்லை. இது கூட்டணி அரசியலுக்கு எவ்வித்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது – என்றார்.

## மங்களவின் அரசியல் பயணம்..

- ★ இத்தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தது. நாடாளுமன்றம் தெரிவான மங்களவுக்கு சந்திரிகாவின் அமைச்சரவையில் துறைமுகங்கள், விமான போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சு பதவி வழங்கப்பட்டது. பிதமராக மஹிந்த ராஜபக்ச அறிவிக்கப்பட்டார்.
- ★ 2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்சவுக்காக மங்கள சமரவீர தீவிரமாக பிரசாரம் முன்னெடுத்தார். பரப்புரைகளுக்கான பொறுப்பு மங்களவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. மஹிந்த வெற்றிபெற்றார். அவர் தலைமையிலான அமைச்சரவையிலும் மங்கள இடம்பிடித்தார்.
- ★ 2007 இல் கருத்து முரண்பாடுகள் மற்றும் கொள்கை ரீதியிலான பிரச்சினைகளால் அமைச்சரவையில் இருந்து மங்கள வெளியேறினார்.
- ★ 2010 இல் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்தார்.
- ★ 2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டார். 59, 836 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவானார்.
- ★ 2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெற செய்வதற்கு தீவிரமாக செயற்பட்டார். அத்தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியும் கவிழ்ந்தது.
- ★ 100 நாட்கள் ஆட்சியின்போது வெளிவிவகார அமைச்சராக செயற்பட்டார். ஜெனிவாவில் காலஅவகாசம் பெறுவதற்கு முக்கிய பங்கு வகித்து செயற்பட்டார்.
- ★ 2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட மங்கள, 96,092 விருப்பு வாக்குகளைப்பெற்று வெற்றிநடையை தொடர்ந்தார்.
- ★ பிணைமுறி விவகாரத்தையடுத்து நிதி அமைச்சர் பதவியில் இருந்து ரவி கருணாநாயக்க நீக்கப்பட்டார். ஜெனிவாவில் இணை அனுசரணை வழங்கியதால் சிங்கள தேசியவாத அமைப்புகளால் மங்களமீதும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.
- ★ 2017 இல் மங்கள சமரவீர நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சராக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறினேசவால் நியமிக்கப்பட்டார். வெளிவிவகார அமைச்சு பதவி திலக் மாரப்பனவிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ★ மைத்திரியின் ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சிக்கு எதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் மங்கள கடுமையாக போராடினார்.
- ★ ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக திகழ்ந்த மங்கள சமரவீர 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது, ரணிலின் எதிர்ப்புகளை, தடைகளையும்மீறி சஜித்தை பொது வேட்பாளராக களமிறக்குவதற்கும் முன்னின்று செயற்பட்டார். சஜித்துக்காக தீவிர பரப்புரைகளை மேற்கொண்டார். எனினும், 2019 நவம்பர் 16 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்றார்.
- ★ ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக பிளவு பட்டது. சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உதயமானது. மங்கள சமரவீர அக்கூட்டணியுடன் இணைந்து செயற்பட்டார்.
- ★ 2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்புமனுவும் தாக்கல் செய்தார். அதன்பின்னர் இறுதி நேரத்தில் போட்டியில் இருந்து விலகினார். இனிமேல் நாடாளுமன்ற அரசியலை முன்னெடுக்கப்போவதில்லை எனவும் அறிவித்தார்.
- ★ இறுதியாக ‘தூய தேசப்பற்றாளர்கள்’ எனும் அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.
- ★ மங்கள சமரவீர அரசியல்வாதி மட்டுமல்ல சிறந்த இராஜதந்திரியும்கூட. மனித உரிமை செயற்பாட்டாளர் என்றுகூட சொல்லாம். 88-89 காலப்பகுதியில் மனித உரிமைகளுக்காக மஹிந்தவுடன் இணைந்து சமராடியவர். நல்லாட்சி காலப்பகுதியிலும் மனித உரிமைகளுக்காக முன்னின்று செயற்பட்டவர்.
- ★ தேசிய இனப்பிரச்சினையை ஏற்றதுடன், அதற்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் குரல் எழுப்பியவர். இதனால் சிங்கள கடும்போக்கு வாதிகளின் எதிர்ப்பையும் கடுமையாக எதிர்கொண்டவர். பௌத்த பிக்குகளைக்கூட வெளிப்படையாகவே விமர்சிக்கக்கூடிய அரசியல் தைரியம் படைத்தவர்.
- ★ தெற்கு அரசியலில் மிக முக்கிய புள்ளி, அஸ்திரம், கிங்மேக்கர் இப்படி பல பக்கங்களைக்கொண்ட மங்கள சமரவீர தனது 65 ஆவது வயதில் நேற்று காலமானார்.

## மங்களவின் மறைவு...

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவையொட்டி நேற்று வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் ரணில் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் தனிப்பட்ட ரீதியில் எனக்கும் அன்னாரது இழப்பு பேரிழப்பாகும். நேற்றுமுன்தினம் மங்களவுக்கு அழைப்பெடுத்துப் பேசியபோது, குணமடைந்ததன் பின்னர் சந்திப்பதாகக் கூறியிருந்தேன். எனினும் துரதிர்ஷ்டவசமாக அது முடியாமற்போனது.

மங்கள ஒரு சிறந்த அரசியல்வாதி. சுதந்திரத்துக்காகவும் மனித உரிமைகளுக்கா கவும் சமத்துவத்துக்காகவும் கைவிடப்பட்டோருக்காகவும் அவரது குரல் ஒலித்தது. 2015 முதல் 2019 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அமைச்சரவையில் வெளிநாட்டுக் கொள்கைகளை நிலைநிறுத்துவதிலும் நிதிக் கையாளுகையிலும் அவர் மிகச் சிறப்பாக செயற்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொவிட் நிதியத்துக்கு...

சந்திப்பில் கலந்துகொண்ட போது ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதற்கு அரசின் எந்த வொரு அரசியல்வாதியும் யோசனை முன்வைக்கவில்லை. எனினும், சில தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் அமைச்சரவையிலுள்ள அனைத்து அமைச்சர்களும் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவை கொவிட் நிதியத்திற்கு வழங்கியுள்ளோம். அதேபோன்று, மாகாண மற்றும் உள்ளூராட்சியிலுள்ள தலைவர்களும் இவ்வாறு குறிப்பிட்ட தொகையை கொவிட் நிதியத்திற்காக வழங்கியுள்ளனர். ஆகவே, பலவந்தமாக எந்தவொரு அரச துறையின் சேவையாளரின் சம்பளமும் கொவிட் நிதியத்திற்காக பெற்றுக் கொள்ளப்படாது – என்றார்.

## மங்களவின் பங்களிப்பு...

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் மாற்றங்களையும் திருப்புமுனைகளையும் ஏற்படுத்தி, இலங்கை மக்களுக்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கத் தீவிரமாகப் பங்களித்து, நன்றியுள்ள அரசியல்வாதியாகத் திகழ்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு, நான் மிகவும் வருந்துகிறேன்.

அன்னாரது மறைவுக்கு, எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரேஷ்ட தலைவரை ...

ட்விட்டர் செய்தியொன்றின் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீரவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மங்களவின் மறைவு செய்தியை கேட்டு தான் மிகுந்த அதிர்ச்சியடைந்ததாகவும், இலங்கைக்காக மங்கள ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மங்களவின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்திற்கு தனது அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 25.08.2021 புதன்கிழமை - ஆவணி 09**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**சுப நேரங்கள்**
காலை 6.07 - 7.35
மாலை 3.15 - 4.46

**அசுப நேரங்கள்**

| ராகு காலம் | எமகண்ட காலம் |
|---|---|
| பிற்பகல் 12.13- 1.45 | காலை 7.36- 9.08 |
| **குளிகை காலம்** | **துர் முகூர்த்தம்** |
| காலை 10.40- 12.13 | காலை 11.48 - 12.37 |

**நட்சத்திரம்: உத்தரட்டாதி** இரவு 8.48 வரை
**யோகம்: சூலம்** அதிகாலை 5.56 - 26.08.2021 அதிகாலை 5.24 வரை

**திதி: திரிதீயை** பிற்பகல் 4.18 வரை
**சதுர்த்தி** பிற்பகல் 4.18 - 26.08.2021 பிற்பகல் 5.14 வரை

**முற்கரணம்: பத்திரை** அதிகாலை 4.06 - பிற்பகல் 4.18 வரை
**பிற்கரணம்: பவம்** பிற்பகல் 4.18 - 26.08.2021 அதிகாலை 4.41 வரை

**மேடம்:** வணிகத்தில் நிதான போக்கு நிலவும். ஊடகப் பணிகளில் இருப்பவர்களுக்கு சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். தம்பதியரிடையே சிறிய பிரச்சினை ஏற்படலாம்.

**ரிஷபம்:** தடையின்றி திருமண சுப அறிகுறி உண்டாகும். காதலர்கள் தங்களுக்குள் வெகுமதி கொடுத்து மகிழ்வார்கள்.

**மிதுனம்:** வணிகத்தில் அவதானம் தேவைப்படலாம். ஆராய்ச்சி துறை பணிகள் சிறப்புறும். பெண்களுக்கு சிறந்த பணி நிலை ஏற்படலாம்.

**கடகம்:** புதிய பணிகள் பொறுப்பேற்கும் நிலை உண்டாகலாம். பதவி உயர்வு கிடைக்கலாம். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும்.

**சிம்மம்:** உறவுகளில் தேவையற்ற நிகழ்வு உண்டாகலாம். வணிகத்தில் கவலைகள் உண்டாகலாம். அவசரமற்ற கடன்கள் வாங்குவதை தவிர்ப்பது நன்மை. சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்திற்கு பிற்பகல் 2.29 வரை பூரம் நட்சத்திரத்திற்கு பிற்பகல் 2.29 லிருந்து 26.08.2021 பி.ப 4.00 வரை

**கன்னி:** உணவு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். காணி/வீடு வாங்கும் நிலை உண்டாகலாம். மாணவர்களின் கல்வி சிறப்புறும்.

**துலாம்:** வணிக விரிவாக்க எண்ணங்கள் உருவாகலாம். ஆசிரியர் தொழிலில் இருப்பவர்களுக்கு சில கௌரவம் கிடைக்கப் பெறலாம்.

**விருச்சிகம்:** உறவுகளில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். பணிகளில் சில பிரச்சினைகள் தோன்றினாலும் நிர்வாகத்தால் மதிப்பு கிடைக்கலாம்.

**தனுசு:** பணப் பற்றாக்குறை விடயங்களில் ஏற்படும் கவலையை இறையிடம் சமர்ப்பித்தல் நன்மை. வயிறு சம்பந்தப்பட்ட உடல் நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம்.

**மகரம்:** தம்பதியரிடையே நல்லிணக்கம் நிலவும். இறையருளால் எதிர்பார்த்த சில விடயங்களில் நன்மை கிடைக்கலாம்.

**கும்பம்:** பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படலாம். நல்ல முடிவுகள் மட்டுமே நன்மை தரும். இல்லத்தின் சூழல் மகிழ்ச்சி தரலாம்.

**மீனம்:** வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். காதலர்களுக்குள் உறவுகள் சிறப்புறும். சந்தைப்படுத்தும் தொழில் நன்மை பெறும்.

# இந்தியாவிடமிருந்து 180 தொன் திரவநிலை ஒட்சிசன் நாட்டுக்கு!



கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்திய கடற்படைக்கு சொந்தமான 'சக்தி' என்றழைக்கப்படும் கப்பல் விசாகப்பட்டினத்திலிருந்து கடந்த 22ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தக் கப்பல் 100 தொன்கள் (5 கொள்கலன்கள்) திரவநிலை மருத்துவ ஒட்சிசனுடன் வருகைத் தந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு உடனடியாக பதிலளிக்கும் வகையில் 27 ஆயிரத்து 500 தொன் கடற்படை கப்பலான சக்தியின் உதவியுடன் இத்தொகுதியினை துரிதமாக விநியோகிப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் இந்திய கடற்படையின் ஒத்துழைப்பு குறித்து இலங்கை - இந்திய கடற்படைகளின் தளபதிகளுக்கிடையில் கடந்த வாரம் விரிவான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சமுத்திர சேது-2 நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்திய கடற்படை கப்பல் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது. இந்திய கடற்படை கப்பல் சக்தி வருகை தந்து சில மணித்தியாலங்களின் பின்னர் இலங்கை கடற்படையின் கப்பலான சக்தியும் 40 தொன்கள் திரவநிலை மருத்துவ ஒட்சிசனுடன் கொழும்பை வந்தடைந்தமையானது, இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளிலுமுள்ள துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் இருதரப்பு கடற்படையினர் இடையிலான ஒன்றிணைவை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்திய கடற்படை கப்பல் சக்தியின் கட்டளை அதிகாரி உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார். இதன்போது இந்திய கடற்படை தளபதி அட்மிரல் கரம்பிர் சிங், இலங்கை கடற்படைக்கு சிறந்த முறையில் ஆதரவினை வழங்கிவருவதாக வைஸ் அட்மிரல் உலுகேதென்ன சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் இந்திய கடற்படையின் கப்பலான சக்தி மூலமாக இந்நடவடிக்கை மேற்கொண்டிருந்த இந்திய கடற்படையினருக்கும் அவர் தனது நன்றியினை தெரிவித்திருந்தார்.

வழமையான விநியோக மார்க்கங்கள் சீரமைக்கப்பட்டுவரும் நிலையில் நட்பு நாடுகளுக்கிடையில் கொவிட்-19 சிகிச்சைக்குரிய அத்தியாவசியமான மருந்துப் பொருட்களை விநியோகிப்பதில் இந்திய கடற்படையின் மிஷன் சாகர் திட்டம் மிக முக்கியமான பங்களிப்பினை வழங்கிவருவதாக உயர் ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டார்.

கடந்த 20ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரையிலான தினங்களுக்குள் இந்தியாவிலிருந்து 180 தொன் திரவநிலை மருத்துவ ஒட்சிசன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இன்னும் பல தொகுதிகள் வருகைத் தரவுள்ளன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொடர்ந்தும் ஒட்சிசனை விநியோகிப்பதற்கு ஏதுவாக திரவநிலை மருத்துவ ஒட்சிசன் வெற்றுக் கொள்கலன்கள் இந்திய கடற்படை கப்பல் சக்தி மூலமாக மீண்டும் விஷாகப்பட்டினத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராகலையில் அம்மன் கோவில் நகைகள் திருட்டு

## சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(டி.சந்ரு)

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோனபிட்டிய, விராலிகலை தோட்டத்தில் கரகம் பாலிக்கும் கோவிலில் அம்மன் சிலைக்கு அணிவித்திருந்த தங்க நகைகளை கொள்ளையிட்ட நபர்கள் இருவர் இராகலை பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விராலிகலை தோட்டத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அம்மன் சிலைக்கு அணிவித்திருந்த தங்கத்திலான பொட்டு மற்றும் மணி ஆகியவற்றை களவாடியுள்ளனர். களவாடிய நகைகளை இருவேறு நகை அடகு பிடிக்கும் இடங்களில் அடகு வைத்து பணம் பெற்றுள்ளனர்.

இராகலை நகரில் அடகு கடை ஒன்றில் பொட்டு அடகு வைக்கப்பட்டுள்ளதுடன், மணியை கோனக்கலை சிறு நகரில் கிராமிய வங்கி ஒன்றில் அடகு வைத்து பணம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, இராகலை பொலிஸார் குறித்த நபர்கள் இருவரையும் கைது செய்ததுடன், நகைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் சந்தேக நபர்கள் தாம் நகைகளை திருடியதாகவும், வறுமை காரணமாக அம்மனுக்கு சூடம் ஏற்றி மன்னிப்பு கேட்டே நகைகளை தாலிக் கயிருடன் கொண்டு சென்றதாகவும், பொலிஸாரிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். சந்தேக நபர்களை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



*மட்டக்களப்பு, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிற்குட்பட்ட நாசீவன் தீவு கிராமத்தில் நேற்று 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (படங்கள் : வாழைச்சேனை நிருபர்)*

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,94,355 | 40,028 | 3,46,767 | 4,355 | 7,560 |

# கொடிகாமத்தில் மூவர் கொரோனாவுக்கு பலி

யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமம் பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான மூவர் நேற்று உயிரிழந்துள்ளனர். கொடிகாமம் மத்தி, கெற்பெலி, அல்லாரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 47, 70 மற்றும் 80 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 47 வயதான நபர் கொடிகாமம் சந்தைத் தொகுதிக்குள் தையலகம் வைத்திருப்பவர் என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நேற்று காலை உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி நகரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட 5,800 பேருக்கு தடுப்பூசி வழங்க வேண்டும்

## பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)



வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட 5 ஆயிரத்து 800 பேருக்கு இராணுவத்துடன் இணைந்து வீடு வீடாகச் சென்று தடுப்பூசி வழங்கப்பட வேண்டியுள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம்.மகேந்திரன் நேற்று தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட 98 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் வழங்க தீர்மானித்து கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தோம். இதுவரை 30 வயதிற்கு மேற்பட்ட 83 ஆயிரத்து 151 பேருக்கு தடுப்பூசி வழங்கியுள்ளோம். அதாவது 84.85 வீதமானவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

இவ்வாறு தடுப்பூசி வழங்குவதன் மூலம் நோயாளர்களின் இறப்பு வீதம் மற்றும் தொற்று பரம்பலை கட்டுப்படுத்த முடியும். அதனால் மக்கள் முன்வந்து தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இறப்பு வீதம் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம். வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட 27 ஆயிரம் பேர் உள்ளனர். அதில் 5 ஆயிரத்து 800 பேருக்கு இன்னும் தடுப்பூசி வழங்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்காக இராணுவத்துடன் இணைந்து வீடு வீடாகச் சென்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வாரம் முழுவதும் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும். 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி வழங்கி அவர்களை இறப்பு மற்றும் நோய் தொற்றிலிருந்து காப்பதே எமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

# சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 9 பேருக்கு கொரோனா



(அட்டாளைச்சேனை)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறுவோருக்கு எதிராக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தினால் கடந்த இரண்டு நாட்களாக அட்டாளைச்சேனை பிரதான வீதியில் (அக்கரைப்பற்று - கல்முனை) அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்தவர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட பரிசோதனை மாதிரிகளில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று (24) பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அகிலன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட ஒலுவில், பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் கடற்கரை உட்பட தொடராக கடந்த இரண்டு நாட்கள் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத் திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதம பொது சுகாதார பரிசோதகர் ஈ.ரீ.சலீம், அட்டாளைச்சேனை பொது சுகாதாரப் பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அக்கரைப்பற்று பொலிஸ் மற்றும் இராணுவத்தினரும் இதில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இதன்போது அனுமதி இன்றி பயணித்தவர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது 9 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலையில் 55 பேருக்கு தொற்று

## வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா



(நோட்டன் பிரிட்ஜ்)


கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு உட்பட்ட பகுதியில் 55 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

70 பேருக்கு கடந்த 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் அறிக்கை நேற்று வெளியானது. அந்த அறிக்கையிலேயே இவர்கள் 55 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொட்டகலை ஆதார வைத்தியசாலை வைத்தியர் ஒருவரும் அங்கு பணிபுரியும் உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட தலவாக்கலை சாம்ஸ், கொட்டகலை கிருஸ்லஸ்பாம், மேபீல்ட் மற்றும் தலவாக்கலை பகுதிகளை சேர்ந்தவர்களே தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 3 வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தல்



(வவுனியா நிருபர்)

ஊரடங்கு சட்டத்தை மீறி வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டிருந்த 3 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த 20 ஆம் திகதி இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நாடு முழுவதும் முழுமையான முடக்கம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் மீன் கடை ஒன்றும், மன்னார் வீதியில் பலசரக்கு கடை ஒன்றும், பேக்கரி ஒன்றும் முடக்க காலப்பகுதியில் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் எதிர்வரும் 10 நாட்கள் வரை தனிமைப்படுத்தல் நோட்டீஸ் ஒட்டப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கையும் விடப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முழு உலகமும் நெருக்கடியான நிலைமையை எதிர்கொண்டுள்ளது. நாடுகளின் பொருளாதாரம், மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட அன்றாட செயற்பாடுகள் அனைத்தும் முடங்கிப்போயிருக்கின்றன.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்கத்துக்கப்பால் மக்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உளவியல் மேம்பாட்டுக்கு ஒவ்வொரு நாடும் அக்கறை செலுத்த வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் வேண்டுகோள் முன்வைத்துள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக மக்களிடையே பாரியதொரு பயம், கவலை இயல்பாக தூண்டப்பட்டுள்ளன. குறிப்பாக, வயதானவர்கள், சுகாதாரத்துறையினர் மத்தியில் மன அழுத்தம் அதிகரித்துள்ளது என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமை, தனிமைப்படுத்தலில் அதிக காலத்தை செலவிடுகின்றமை, எதிர்காலம் குறித்த ஏக்கம் ஆகியவை காரணமாக மனச்சோர்வு, தீங்கு விளைவிக்கும் பழக்கங்களுக்கு ஆளாகுதல், சுயமாக தீங்கு விளைவித்துக்கொள்ளல், போதைப்பொருளுக்கு அடிமையாதல் போன்றன பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் பரவிவரும் கொரோனா தொற்று காரணமாக மக்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாவார்களேயானால் அது நீண்ட காலத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கொவிட்-19 தொற்றுநோய் பரவலின்போது மனநல ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய மனநல நிறுவனம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

ஒவ்வொருநாளும் நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தல், நெருங்கிய, அன்பானவர்களின் இழப்பு, நோயினால் ஏற்படும் மன அழுத்தம், பதற்றம் ஆகியவை முன்னெப்போதுமில்லாத

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, ஓகஸ்ட் 25ஆம் திகதி, புதன்கிழமை**

# சாதகமாகச் சிந்தித்து கவனமாக செயற்படுவோம்!

அளவுக்கு அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மத்தியில் கவலையும் பயமும் மனச்சோர்வும் மேலும் அதிகரிக்கக்கூடும் என மனநல மருத்துவ ஆலோசகர், வைத்திய நிபுணர் நெத்மா பத்மகுமார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் சமூக ஊடகங்களில் பகிரப்படுவதாலும் பல சந்தர்ப்பங்களில் மக்களின் மனதைப் பாதிக்கும் வகையிலான படங்கள், பதிவுகள் வெளியிடப்படுவதாலும் பாதிப்பு இன்னும் மேலோங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் உடற்பயிற்சி, சாதகமான தீர்மானங்கள், ஆரோக்கியமான உணவுகள், முற்போக்கான சிந்தனைகள் ஊடாக இவ்வாறான அழுத்தங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார். மதச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், இசையோடு இணைந்திருத்தல், தோட்ட வேலைகள், நண்பர்களுடனான தொடர்பாடல்கள் ஆகியவையும் உள ரீதியாக முன்னேற்றத்தை உண்டாக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயினால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு பின்வரும் விடயங்களை உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

செய்திகள் தொடர்பில் அவதானமாக இருத்தல், ஆரோக்கியம் மிக்க வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தொற்றுநோயைப் பற்றி மிக அதிகமாக தேடுவதைத் தவிர்த்தல், கையடக்கத் தொலைபேசியில் செலவழிக்கும் நேரத்தை குறைத்து பிற செயற்பாடுகளில் ஈடுபடுதல், அன்பாக இருத்தல், உறவுகளுக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் உதவுதல், பாதிக்கப்படுவோருக்கு பாகுபாட்டைக் காட்டாதிருத்தல், சாதகமான புதிய விடயங்கள் குறித்து ஆராய்தல், குழந்தைகளுடன் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், விளையாடுதல், வரைதல், பூந்தோட்டம் உள்ளிட்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல், அன்புக்குரியவர்களுடன் அடிக்கடி தொலைபேசியில் உரையாடுதல், சிரமப்படுவோருக்கு உதவுதல் ஆகியன மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு உதவும் என சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை செவிசாய்த்து அரசாங்கம் முடக்கத்தை அறிவித்துள்ளது. எதிர்காலத்தில் மக்கள் பல தியாகங்களைச் செய்யத் தயாராக வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்களின் மனநலம் பாதிக்கப்படும் என அரசாங்கம் சிந்திக்காது என்பது வெளிப்படை. ஆகவே, நமது வாழ்க்கையின் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு சாதகமாகச் சிந்தித்து ஆரோக்கியமான நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுவதே உகந்ததாகும்.





# அமெரிக்காவை எச்சரிக்கும் தலிபான்கள்

ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வெளியேற்றும் நடவடிக்கையை அமெரிக்கா துரிதமாக மேற்கொண்டு வருகிறது. இம்மாதம் 31ஆம் திகதிக்குள் படைகளை விலக்கவேண்டும். அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாட்டு இராணுவ வீரர்கள் தம் நாட்டுப் படைகளை வெளியேற்றிக் கொண்டிருக்கின்றனர். ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்த வெளிநாட்டுப் படைகளுக்கு உதவிய ஆப்கானியரும் அவர்களின் குடும்பங்களும் பாதுகாப்பு அச்சம் காரணமாக தாய்நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

அம்ரிக்கா எதிர்பார்த்ததுபோன்று 31ஆம் திகதிக்குள் அனைத்துப் படைகளும் வெளியேற முடியாத நிலை உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் இதனை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், வெளிநாட்டுப் படைகள் 31ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என தலிபான் பேச்சாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்துக்கு வெளியே கடுமையான வெயிலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய மேற்கத்திய நாட்டவரை பாதுகாப்பாக வெளியேற்ற கடைசி திகதியை மேலும் நீடிக்கவேண்டும் என்று பல நாடுகளும் கோரி வருகின்றன.

தங்கள் நாட்டவர்கள் ஆப்கானிஸ்தானிலேயே தங்கினால் அவர்கள் தலிபான்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடும் என்று அந்த நாடுகள் கருதுகின்றன. இதனை தலிபான்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது தாக்குவார்களா என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

தலிபான்கள் வாகுறுதியளித்ததுபோல் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல் நடத்தவில்லை என பைடன் தெரிவித்துள்ளார். ஆனால், ஆப்கான் மக்களை பழிவாங்க மாட்டோம், துன்புறுத்த மாட்டோம் என வாக்குறுதியளித்த தலிபான்கள் அந்த வாக்குறுதியை கைவிட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி இதுபற்றி பெரிதாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு பல ஆயுதக் குழுக்கள் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தக் குழுக்களின் மூலம் ஆபத்து வரலாம் என அமெரிக்காவும் நேச நாடுகளும் அஞ்சுகின்றன. விமான நிலையத்துக்கு மிக நெருக்கமாக மக்கள் குழுமியுள்ளதால் மீட்பு விமானங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் எனபதற்காக வெப்பத்தை வெளியேற்றி மிகப் பாதுகாப்புடன் விமானங்கள் தரை இறங்குகின்றன. தலிபான்களின் எழுச்சியைத் தொடர்ந்து காபூலிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஆப்கானியர்களையும், வெளிநாட்டவர்களையும் வெளியேற்ற உதவுவதற்காக அமெரிக்கன் ஏர்லைன்ஸ், டெல்டா, யுனைடெட் உள்ளிட்ட அமெரிக்க வணிக விமான நிறுவனங்கள் உதவுகின்றன. ஆப்கானிலிருந்து வெளியேற்றப்படுபவர்கள் கட்டார், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள அமெரிக்கத் தளங்களுக்கு கொண்டுசெல்லப்படுகிறார்கள். அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கும் வணிக விமானங்கள் மூலம் கொண்டுசெல்லபப்படுவார்கள். பிடென் நிர்வாகத்தின்படி, 15,000 அமெரிக்கர்களும், 50,000 முதல் 60,000 ஆப்கானிய கூட்டாளிகள் வெளியேற்றப்பட வேண்டும்.

சிவில் ரிசர்வ் ஏர் ஃப்ளீட் இரண்டு முறை மட்டுமே செயற்படுத்தப்பட்டது. 1990 - 1991 வளைகுடா போருக்கு ஒரு முறை துருப்புகளை ஏற்றிய பின்னர் 2002 - 2003இல் ஈராக் படையெடுப்புக்காக துருப்புகளுடன் பறந்தது. இப்போது மூன்றாவது முறையாக பறக்கிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து ஜேர்மனியிலுள்ள ராம்ஸ்டைன் விமானப்படைத்தளத்துக்கு ஓகஸ்ட் 21 ஆம் திகதி சென்ற விமானத்தில் ஆப்கானிய பெண், குழந்தையைப் பிரசவித்தார் என்று அமெரிக்க விமானப் படையின் ஏர் மொபிலிட்டி கமாண்ட் தமது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. அந்த விமானம் தரை இறங்கிய பின்பு அதற்குள் சென்ற மருத்துவ ஊழியர்கள் விமானத்தின் சரக்கு வைக்கும் பகுதிக்குள் வைத்து அப்பெண்ணுக்கு பிரசவம் பார்த்தனர். அந்த விமானத்தளத்திற்கு அருகே இருக்கும் மருத்துவமனை ஒன்றில் தாயும் சேயும் நலமுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அப்பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. எனவே, விமானத்தின் உட்பகுதியில் காற்றழுத்தத்தை அதிகரிப்பதற்காக விமானி அந்த விமானம் பறந்துகொண்டிருந்த உயரத்தை குறைந்ததாகவும் அது காற்றழுத்தத்தைச் சீராக்கி, தாயின் உயிரைக் காப்பாற்ற உதவியது என்றும் ஏர் மொபிலிட்டி கமாண்ட் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

அகதிகளை ஏற்பதில் ஒவ்வொரு நாடும் தனிக் கொள்கைகளை பின்பற்றி வருகின்றன. அந்தக் கொள்கைக்கு மாறாக, புதிய அகதிகளை ஏற்றுக்கொள்வதில் சிக்கல் உள்ளது என்பதால், இப்போது அகதிகளாக செல்லும் ஆப்கானியர்களின் நிலை பரிதாபத்துக்குரியதாக மாறியுள்ளது. இருப்பினும், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட சில நாடுகள் ஆப்கானிஸ்தான் அகதிகளை சில நெறிமுறைகளுக்குட்பட்டு ஏற்றுக்கொள்கின்றன. 2020ஆம் ஆண்டு நிலைவரப்படி, 2.8 மில்லியன் ஆப்கானிஸ்தான் அகதிகள் வெளிநாடுகளில் உள்ளதாக யு.என்.ஹெச்.சி.ஆர். (UNHCR) தெரிவித்துள்ளது. இன்றைய நிலையில் அத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

காபூல் விமான நிலையம் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். - கே. இயக்கம், தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தலாம் என அமெரிக்கா அச்சம் தெரிவித்திருக்கிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களைக்கொண்ட அமைப்பாகும். இதன் தலைவர்கள் ஏற்கனவே அமெரிக்கப் படைகளால் படுகொலைசெய்யப்பட்டுவிட்டனர். ஆனாலும் இந்த அமைப்பு இப்போது மீண்டும் உயிர்ப்புடன் எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

காபூலில் தொடர்ந்து தமது நாட்டு இராணுவத்தை அமெரிக்கா நிலைநிறுத்தும் என்ற சந்தேகம் தலிபான்களுக்கு உள்ளது. அதன் காரணமாகத்தான் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குப் பின்னர் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகளுடன் மீண்டும் மோதுவதற்கு தலிபான்கள் தயாராகிவருகின்றனர்.

**-ரமணி-**








# தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு செல்லும் வீதிகளில் நேற்று கடும் வாகன நெரிசல்



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை 4 மணியளவில் திறக்கப்பட்டதையடுத்து பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் தமது அறுவடைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக வந்திருந்ததுடன், மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்காக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான வர்த்தகர்கள் வருகைதந்திருந்தனர்.

இதனால், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் பிரதான வீதிகளில் கடுமையான வாகன நெரிசல் காணப்பட்டது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகள் ஏனைய நாட்களைவிட 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, கரட், பீட், கறி மிளகாய் ஆகிய மரக்கறி வகைகளின் ஒரு கிலோவின் மொத்த விலை 90 ரூபாவிலிருந்து 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், கத்தரி, வெள்ளரிக்காய், நோகோல், பூசணி, தம்பள, வெண்டிக்காய், பீர்க்கங்காய் போன்ற காய்கறி வகைகள் ஒரு கிலோவின் விலை 50 ரூபாவிலிருந்து 110 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன், பிரதான வீதியில் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் 5 கிலோமீற்றருக்கும் அதிக தூரம் வரையில் இரு புறங்களிலும் பாரியளவு போக்குவரத்து நெருக்கடியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இருந்தபோதிலும், பொருளாதார மத்திய நிலையத்துக்கு உள்நுழையும் இடங்களில் சுகாதார நடைமுறைகள் கடுமையாக பின்பற்றப்பட்டிருந்தாலும் ஒருசில வியாபாரிகள் முகக்கவசங்களின்றி செயற்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 12 மணிவரையில் பொருளாதார மத்திய நிலையம் திறந்துவைக்கப்படுமாக இருந்தால் இதுபோன்று வாகன நெரிசல் ஏற்படாது என்று வியாபாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, அநேகமானவர்கள் நாட்டை முடக்குமாறு கோரினாலும் விவசாயிகளின் அறுவடை தொடர்பில் எந்த அக்ககறையுமின்றி இவ்வாறு தெரிவிக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர் .



# சட்டத்தரணி கௌரி சங்கரியின் மறைவுக்கு இரங்கல்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாரான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் மறைவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி மிகவும் அபாயகரமான வழக்குகளில்கூட அதனைத் தனது பெயரிலேயே துணிந்து தாக்கல் செய்து வாதாடியவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் கொழும்புக் கிளையின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாரின் துயரில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சட்டத்துறையில் நீண்டகாலம் துணிச்சலுடன் செயலாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு – என்றுள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(மன்னார் நகர் நிருபர்)



அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின்கீழ் கடந்த காலங்களில் கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக சிறையிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காகவும், அரசியல் கைதிகளுக்காகவும் மிக நீண்டகாலமாக செயற்பட்டுவந்த சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பாகும் - நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் குறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

சிறையில் தடுத்துவைக்கப்படுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காகவும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நீண்டகாலமாக செயற்பட்டு வந்திருந்தவர் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா.

இவரின் இழப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நம்பியிருந்தவர்களுக்கு பாரிய இழப்பாகவே அமைந்துள்ளது.

ஆட்கடத்தல், காணாமலாக்கப்பட்டமை மற்றும் அரசியல் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்காக உயர்நீதிமன்றத்தில் வாதாட்டங்களை முன்வைத்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பேசப்பட்ட ஒரு பிரபல சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா.

என்னை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தபோது எனது விடுதலைக்காக நீதிமன்றத்தில் வாதாடி என்னை பிணையில் செல்ல அனுமதி பெற்றுத் தந்தவர். அவரின் இழப்பை ஈடுசெய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

அவரை இழந்து நிற்கும் கணவர் கே.வி.தவராசா மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ்.தவராசாவின் பாரியார் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்குபெறுவதோடு அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

நாட்டில் அதிகம் பேசப்படுகின்ற பல வழக்குகளில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா முன்னிலையாகியிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளுக்காக வாழ்நாள் முழுவதும் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி என மறைந்த பெருந்தகை போற்றப்படுகிறார். சவால்மிக்க பல வழக்குகளை எதிர்கொண்டவர். அவர் புகழ்பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணி மட்டுமல்ல, ஒரு தலைசிறந்த மனித உரிமைச் செயற்பாட்டாளருமாவர். அத்துடன் தமிழ் தேசியத்தின்பால் அதீத பற்றுக்கொண்டவர்.

1983இற்குப் பின்னரான காலகட்டத்தில் எதுவித குற்றமும் அறியாத பல தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டபோது தன்னலம் கருதாது தாமாக முன்வந்து பல தமிழ் இளைஞர்களை காப்பாற்றியவர். பயங்கரவாத தடைச் சட்ட வழக்குகளில் சட்டத்தரணிகள் முன்னிலையாக பயந்த சமயத்தில் துணிச்சலாக களமிறங்கி பலரின் விடுதலையை சாத்தியமாக்கியதுடன், தொடர்ந்தும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் காரணமாயிருந்தார். நாட்டின் முக்கியமான வழக்குகளிலும், சர்வதேச அளவில் பேசப்படும் வழக்குகளிலும் கௌரி சங்கரி தவராசா முன்னிலையாகியிருந்தவர்.

அது மட்டுமல்ல, எமது நிறுவனம் சட்ட ரீதியாக எதிர்நோக்கிய பல சவால்களுக்கு முகங்கொடுக்க சட்டத்தரணி தவராசா தம்பதிகள் தமது பலமான சட்ட உதவிகளைச் செய்ததோடு நீதிமன்றங்களில் தோன்றி அவற்றிலிருந்து நிறுவனம் விடுபட உதவினர். அத்துடன், கடந்த கார்த்திகைத் திங்களில் எமது உதயன் நிறுவனம் எதிர்கொண்ட வழக்கை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் காரணமாயிருந்தவர்கள் சட்டத்தரணி தவராசா தம்பதிகள்.

சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில், அன்னார் நேற்று முன்தினம் மாலை காலமானதாக அறிந்தேன்.

அமரர் கௌரி சங்கரி தவராசாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் – என்றுள்ளது.

## தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்படுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காக மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்திருந்த சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம்.

- இவ்வாறு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இவர் ஆரம்ப காலங்களில் தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை போன்ற முக்கியமானவர்களின் வழக்கு விவகாரங்களில், ஆட்சியாளர்களால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்களையும் மீறி துணிவோடு நீதிமன்ற படி ஏறி வழக்காடிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.ரி.தவராசாவுக்கு எப்போதும் பக்கபலமாக நின்று சட்ட ஆலோசனைகள் உட்பட பல்வேறு வழிவகைகளிலும் உதவி வந்திருக்கின்றார்.

உயர்நீதிமன்றில் அரசமைப்பு தொடர்பான மிக முக்கிய வழக்குகளை முன்னின்று நெறிப்படுத்தியதன் ஊடாக தனது சட்டப் புலமையையும் வாதத் திறமையையும் இவர் பறைசாற்றி வந்திருந்தார்.

பிரதானமாக குடிமக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு விடயங்களில் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். மனித கடத்தல்கள், திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலைகள் போன்ற வழக்குகளுக்காக உயர்நீதிமன்றில் சட்டத்தரணிகள் குழுவோடு நின்று, அவற்றை நெறிப்படுத்தியதன் மூலம் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் பேசப்பட்ட பிரபல சட்டத்தரணியாவார்.

இவர் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சட்ட ஆலோசகராக பல பணிகளை ஆற்றியுள்ளதுடன், நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தின் உயிர்ப்பையும் தக்கவைப்பதில் தனது சட்டத்துறை மூலம் முக்கிய வகிபாகத்தை செய்து வந்திருக்கின்றார்.

மேலும், குடியியல் வழக்குகள், பெண்களுக்கு எதிரான அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகி நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஒருபோது பின்னின்றதில்லை. இவரின் திடீர் இழப்பு எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அன்னாரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது.

# புத்தளத்தில் புதிதாக 85 பேருக்கு தொற்று

(ஜூட் சமந்த)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதிதாக 85 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம், ஆனமடுவ மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களில் 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனமடுவ நீதவான் மற்றும் அவரின் கணவர் ஆகியோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிலாபம் மற்றும் மாதம்மை ஆகிய பிரதேசங்களில் 12 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இவர்களில், மாதம்பை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் உப பொலிஸ் பரிசோதகரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில தினங்களில் மாதம்பை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் 07 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வென்னப்புவ மற்றும் தங்கொட்டுவ ஆகிய பிரதேசங்களில் 13 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளாமையினால் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூவர் உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இரணவில சிகிச்சை மத்திய நிலையம், சிலாபம் பொது வைத்தியசாலை மற்றும் புத்தளம் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் இந்தக் கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

# வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் – ஜேர்மன் வணபிதா அல்பிரட் மணிமாறன் சந்திப்பு



*(மன்னார் நகர் நிருபர்)*

ஜேர்மனை வசிப்பிடமாகக்கொண்ட வணபிதா அல்பிரட் மணிமாறன் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இலங்கைக்கு வருகைதந்த ஜேர்மனை வசிப்பிடமாகக்கொண்ட வணபிதா அல்பிரட் மணிமாறனை பிரதமரின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளர் வணக்கத்துக்குரிய வணபிதா கலாநிதி எஸ்.சந்திரகுமார் வரவேற்ற நிலையில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்றார்.

யாழ். மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட வணபிதா அல்பிரட் மணிமாறன், வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது வடமாகாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும், கொரோனா தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் நபரொருவர் பொல்லால் தாக்கிக் கொலை

## கேகாலையில் சம்பவம்

மதுபோதையில் நபரொருவரை பொல்லால் தாக்கிக் கொலைசெய்த சம்பவமொன்று கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரங்வல பிரதேசத்தில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்வம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ரங்வல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு வேளையில் மதுபோதையில் வந்த நபரொருவர், இன்னுமொரு நபரை பொல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக கேகாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரங்வல, கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. குடும்பப் பிரச்சினையினால் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலைச்சம்பத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கண்டி திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராக ஆளுநர் டிக்கிரி நியமனம்

(இரத்தினபுரி நிருபர்)



சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கண்டி திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்ற கொப்பேகடுவ பரம்பரையில் ஒருவராவார். அமரர் ஹெக்டர் கொப்பேகடுவ மற்றும் அமரர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகிய இருவரும் நாட்டுக்கு சிறந்த சேவைகளை நிலைநாட்டியவர்களாவர்.

1972ஆம் ஆண்டு கண்டி திரித்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இடம்பெற்றபோது மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக செயற்பட்டவர் ஹெக்டர் கொப்பேகடுவ என்பதும் குறிப்பிடத்தக்கது.

2022ஆம் ஆண்டு கண்டி திரித்துவக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு பூர்த்திவிழா கொண்டாடப்படவுள்ள நிலையில், கொப்பேகடுவ பரம்பரையைச் சார்ந்த அவரது உறவினரான சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சியில் 38 பேருக்கு கொரோனா

*(சாவகச்சேரி நிருபர்)*

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் 38 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்மராட்சி வரணி வடக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 26 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதுடன், வைத்தியசாலை மற்றும் சுகாதாரப் பணிமனை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலும் மேலும் 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரத்தொட்டவில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

## சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் கைது

ரத்தொட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரலுகஸ்தென்ன பிரதேசத்தில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இந்தச் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், வெரலுகஸ்தென்ன, தங்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான காரணம் இதுவரையில் அடையாளங்காணப்படவில்லை.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்தொட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைக்கு சென்றவர் சிகிச்சைக்காக பெயர் பதியும்போது விழுந்து மரணம்

## அன்ரிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி

*(வவுனியா நிருபர்)*

வவுனியா வைத்தியசாலைக்கு காய்ச்சல் என சென்ற நபர் வைத்தியசாலையில் தனது பெயர் விபரங்களை பதிந்துகொண்டிருந்தபோது விழுந்து மரணமடைந்துள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

காய்ச்சல் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மருந்து எடுப்பதற்காக நபர் ஒருவர் சென்றுள்ளார். அவரது உடல்நிலையை அவதானித்த தனியார் மருத்துமனையைச் சேர்ந்தவர்கள் குறித்த நபரை வவுனியா வைத்தியசாலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அந்த நபர் வவுனியா வைத்தியசாலைக்கு சென்று அங்கு சிகிச்சை பெறுவதற்காக தனது பெயர் விபரங்களை பதிவு செய்துகொண்டிருந்தபோது கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வவுனியா உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 55 வயது நபராவார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# செட்டிகுளம் பிரதேச வைத்திய அதிகாரிக்கு கொவிட் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச வைத்திய அதிகாரிக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் கடந்த இரு மாதங்களில் 200இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், அதனை கட்டுப்படுத்துவதற்காக மக்களுக்காக களப்பணி ஆற்றிவந்த செட்டிகுளம் பிரதேச வைத்திய அதிகாரி தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தன்னை கொவிட் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.

இதன்போது அவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்காக களப்பணியில் ஈடுபட்டுவரும் சுகாதார துறையைச் சேர்ந்த பலரும் தொற்றுக்கு இலக்காகிவரும் நிலையில், நிலைமையை உணர்ந்து மக்கள் பொறுப்புணர்வுடனும், விழிப்புடனும் செயற்பட வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2021 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

### இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலண்டுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலண்டுக்கானது | | |
| | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் |
| | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % |
| **மொத்த வருமானம்** | **51,318,471** | **53,227,270** | **(3.6)** | **25,246,918** | **24,361,507** | **3.6** | **55,295,115** | **56,505,300** | **(2.1)** | **27,003,014** | **25,599,961** | **5.5** |
| வட்டி வருமானம் | 41,981,422 | 46,200,358 | (9.1) | 21,234,361 | 21,674,493 | (2.0) | 45,163,689 | 49,243,043 | (8.3) | 22,773,864 | 22,885,240 | (0.5) |
| கழி: வட்டிச் செலவினங்கள் | 22,715,704 | 28,751,908 | (21.0) | 11,182,567 | 14,203,959 | (21.3) | 24,059,172 | 30,308,131 | (20.6) | 11,908,057 | 14,781,649 | (19.4) |
| **தேறிய வட்டி வருமானம்** | **19,265,718** | **17,448,450** | **10.4** | **10,051,794** | **7,470,534** | **34.6** | **21,104,517** | **18,934,912** | **11.5** | **10,865,807** | **8,103,591** | **34.1** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 5,837,923 | 4,418,159 | 32.1 | 2,869,145 | 1,750,417 | 63.9 | 6,264,730 | 4,594,447 | 36.4 | 3,010,814 | 1,835,332 | 64.0 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 780,725 | 630,612 | 23.8 | 410,680 | 206,820 | 98.6 | 781,458 | 630,912 | 23.9 | 411,271 | 206,940 | 98.7 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **5,057,198** | **3,787,547** | **33.5** | **2,458,465** | **1,543,597** | **59.3** | **5,483,272** | **3,963,535** | **38.3** | **2,599,543** | **1,628,392** | **59.6** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/நட்டம் | 46,386 | (106,541) | 143.5 | 444,325 | 557,580 | (20.3) | 46,386 | (106,541) | 143.5 | 444,325 | 557,580 | (20.3) |
| நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தேறிய இலாபம் | | | | | | | | | | | | |
| - இலாப(நட்ட) கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் | 59,176 | 66,030 | (10.4) | 17,132 | 32,266 | (46.9) | 59,176 | 66,030 | (10.4) | 17,132 | 32,266 | (46.9) |
| - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதரண பெறுமதியில் | 28,345 | 21,790 | 30.1 | 2,405 | 15,958 | (84.9) | 28,345 | 21,790 | 30.1 | 2,405 | 15,958 | (84.9) |
| - கடன் தீர்ப்பனவு செலவில் | 5,444 | - | 100.0 | 5,444 | - | 100.0 | 5,444 | - | 100.0 | 5,444 | - | 100.0 |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 3,359,775 | 2,627,474 | 27.9 | 674,106 | 330,793 | 103.8 | 3,727,345 | 2,686,531 | 38.7 | 749,030 | 273,585 | 173.8 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **27,822,042** | **23,844,750** | **16.7** | **13,653,671** | **9,950,728** | **37.2** | **30,454,485** | **25,566,257** | **19.1** | **14,683,686** | **10,611,372** | **38.4** |
| கழி: பெறுமதி குறைப்பு | 4,994,900 | 7,436,124 | (32.8) | 3,815,640 | 2,581,851 | 47.8 | 5,863,443 | 8,057,215 | (27.2) | 4,283,654 | 2,853,697 | 50.1 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **22,827,142** | **16,408,626** | **39.1** | **9,838,031** | **7,368,877** | **33.5** | **24,591,042** | **17,509,042** | **40.4** | **10,400,032** | **7,757,675** | **34.1** |
| **கழி: தொழிற்பாட்டு செலவினங்கள்** | | | | | | | | | | | | |
| ஊழியர் தொடர்பான செலவினங்கள் | 5,874,944 | 4,806,267 | 22.2 | 2,857,697 | 2,201,577 | 29.8 | 6,516,252 | 5,284,371 | 23.3 | 3,186,309 | 2,442,288 | 30.5 |
| பெறுமானதேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு செலவுகள் | 1,386,583 | 1,166,024 | 18.9 | 748,780 | 599,486 | 24.9 | 1,332,679 | 1,223,844 | 8.9 | 675,630 | 640,713 | 5.4 |
| ஏனைய செலவினங்கள் | 3,731,343 | 3,608,999 | 3.4 | 1,879,793 | 1,630,966 | 15.3 | 4,082,100 | 3,908,015 | 4.5 | 2,047,095 | 1,785,776 | 14.6 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **10,992,870** | **9,581,290** | **14.7** | **5,486,270** | **4,432,029** | **23.8** | **11,931,031** | **10,416,230** | **14.5** | **5,909,034** | **4,868,777** | **21.4** |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **11,834,272** | **6,827,336** | **73.3** | **4,351,761** | **2,936,848** | **48.2** | **12,660,011** | **7,092,812** | **78.5** | **4,490,998** | **2,888,898** | **55.5** |
| கழி: நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 2,286,864 | 1,503,655 | 52.1 | 932,076 | 664,399 | 40.3 | 2,462,821 | 1,612,376 | 52.7 | 1,013,200 | 709,871 | 42.7 |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **9,547,408** | **5,323,681** | **79.3** | **3,419,685** | **2,272,449** | **50.5** | **10,197,190** | **5,480,436** | **86.1** | **3,477,798** | **2,179,027** | **59.6** |
| கழி: வருமான வரிச் செலவினம் | 2,482,721 | 1,356,719 | 83.0 | 932,875 | 806,973 | 15.6 | 2,677,541 | 1,484,068 | 80.4 | 1,060,724 | 858,905 | 23.5 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **7,064,687** | **3,966,962** | **78.1** | **2,486,810** | **1,465,476** | **69.7** | **7,519,649** | **3,996,368** | **88.2** | **2,417,074** | **1,320,122** | **83.1** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | | | | | | | | | |
| தலைமை கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 7,064,687 | 3,966,962 | 78.1 | 2,486,810 | 1,465,476 | 69.7 | 7,519,649 | 3,996,368 | 88.2 | 2,417,074 | 1,320,122 | 83.1 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | | | | - | - | - | - | - | - |
| | **7,064,687** | **3,966,962** | **78.1** | **2,486,810** | **1,465,476** | **69.7** | **7,519,649** | **3,996,368** | **88.2** | **2,417,074** | **1,320,122** | **83.1** |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை/ குன்றிய இலாபம் (ரூ.) | **6.17** | **3.47** | **78.1** | **2.17** | **1.28** | **69.7** | **6.57** | **3.49** | **88.2** | **2.11** | **1.15** | **83.1** |

### அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

| | வங்கி | | | | | | குழுமம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலண்டுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | | | ஜூன் 30இல் முடிவடைந்த காலண்டுக்கானது | | |
| | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் | 2021 | 2020 | மாற்றம் |
| | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % |
| காலப்பகுதிக்கான இலாபம் | **7,064,687** | **3,966,962** | **78.1** | **2,486,810** | **1,465,476** | **69.7** | **7,519,649** | **3,996,368** | **88.2** | **2,417,074** | **1,320,122** | **83.1** |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்படவுள்ளவை: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுதியில் மதிப்பிடப்பட்ட கடன் சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| இலாபம்/(நட்டமாக) மீள்மதிப்பிடப்பட்டவை | 15,233 | 228,308 | (93.3) | (25,170) | 233,652 | (110.8) | 15,233 | 228,308 | (93.3) | (25,170) | 233,652 | (110.8) |
| இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்பட்டவை | (28,345) | (21,790) | (30.1) | (2,405) | (15,958) | 84.9 | (28,345) | (21,790) | (30.1) | (2,405) | (15,958) | 84.9 |
| பெறுமான குறைப்பு சம்பந்தமான ஏற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் | 3,013 | 5,189 | (41.9) | (8,302) | 1,798 | (561.7) | 3,013 | 5,189 | (41.9) | (8,302) | 1,798 | (561.7) |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (3,081) | (59,278) | 94.8 | 8,610 | (61,458) | 114.0 | (3,081) | (59,278) | 94.8 | 8,610 | (61,458) | 114.0 |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த வேண்டியுள்ள தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **(13,180)** | **152,429** | **(108.6)** | **(27,267)** | **158,034** | **(117.3)** | **(13,180)** | **152,429** | **(108.6)** | **(27,267)** | **158,034** | **(117.3)** |
| இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையற்றவை: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றின்னூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மூலதன சாதனங்கள்: | | | | | | | | | | | | |
| மீள் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | 548,657 | (547,084) | 200.3 | 1,021,701 | (316,399) | 422.9 | 548,657 | (547,084) | 200.3 | 1,021,701 | (316,399) | 422.9 |
| செலாவணியில் ஏற்பட்ட மாற்றம் | 266,338 | 50,577 | 426.6 | 9,512 | 6,313 | 50.7 | 266,338 | 50,577 | 426.6 | 9,512 | 6,313 | 50.7 |
| ஆரம்ப நிலுவை மீதான விகித மாற்றத்தின் விளைவு அடங்கலாக பிற் போடப்பட்ட வரி விளைவு | (87,972) | 139,022 | (163.3) | (247,491) | 86,824 | (385.0) | (87,972) | 139,022 | (163.3) | (247,491) | 86,824 | (385.0) |
| | 727,023 | (357,485) | 303.4 | 783,722 | (223,262) | 451.0 | 727,023 | (357,485) | 303.4 | 783,722 | (223,262) | 451.0 |
| விகித மாற்றத்தின் மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு | | | | | | | | | | | | |
| வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான நட்டம் | (205,794) | - | (100.0) | - | - | - | (209,248) | - | (100.0) | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு உபரி | 166,311 | - | 100.0 | - | - | - | 331,244 | - | 100.0 | - | - | - |
| | (39,483) | - | (100.0) | - | - | - | 121,996 | - | 100.0 | - | - | - |
| **இலாபம்/நட்டமாக மீள் வகைப்படுத்த தேவையில்லாத தேறிய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **687,540** | **(357,485)** | **292.3** | **783,722** | **(223,262)** | **451.0** | **849,019** | **(357,485)** | **337.5** | **783,722** | **(223,262)** | **451.0** |
| வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **674,360** | **(205,056)** | **428.9** | **756,455** | **(65,228)** | **1,259.7** | **835,839** | **(205,056)** | **507.6** | **756,455** | **(65,228)** | **1,259.7** |
| காலப்பகுதிக்கான வரி நீங்கலான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **7,739,047** | **3,761,906** | **105.7** | **3,243,265** | **1,400,248** | **131.6** | **8,355,488** | **3,791,312** | **120.4** | **3,173,529** | **1,254,894** | **152.9** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | | | | | | | | | |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 7,739,047 | 3,761,906 | 105.7 | 3,243,265 | 1,400,248 | 131.6 | 8,355,488 | 3,791,312 | 120.4 | 3,173,529 | 1,254,894 | 152.9 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | | | | - | - | - | - | - | - |
| | **7,739,047** | **3,761,906** | **105.7** | **3,243,265** | **1,400,248** | **131.6** | **8,355,488** | **3,791,312** | **120.4** | **3,173,529** | **1,254,894** | **152.9** |

### சம்பத் வங்கி பீஎல்சீ (சாதாரண பங்குகள்) 2021 ஜூன் 30இல் உள்ளவாறு முதல் நிலை 20 பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | % உரிமை |
|---|---|---|---|
| 1 | வெலிபல் வன் பிஎல்சி | 171,117,084 | 14.95 |
| 2 | ஊழியர் சேமலாப நிதி | 114,123,780 | 9.97 |
| 3 | அயன்கா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் | 112,898,166 | 9.87 |
| 4 | திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா* | 93,799,287 | 8.20 |
| 5 | வரையறுக்கப்பட்ட ரோஸ்வூட் (தனியார்) நிறுவனம் - (கணக்கு இல 1) | 51,695,893 | 4.52 |
| 6 | வரையறுக்கப்பட்ட அக்பார் ப்ரதர்ஸ் (தனியார்) நிறுவனம் (கணக்கு இல 1) | 26,312,680 | 2.30 |
| 7 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - ஆயுள் நிதி | 25,722,027 | 2.25 |
| 8 | வரையறுக்கப்பட்ட பீனிக்ஸ் வென்சர்ஸ் (தனியார்) நிறுவனம் | 24,909,975 | 2.18 |
| 9 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சபை | 20,524,282 | 1.79 |
| 10 | சம்பத் வங்கி பிஎல்சி (கணக்கு இல 4) (சம்பத் வங்கி ஓய்வூதிய நிதியம்) | 11,546,646 | 1.01 |
| 11 | பெம்பர்டொன் ஏசியன் ஒப்பர்சூனிடீஸ் பண்ட் | 11,393,010 | 1.00 |
| 12 | சிட்டி வங்கி நிவ்யோர்க் எஸ்/ஏ நோர்ஜஸ் வங்கி கணக்கு இல 2 | 10,869,649 | 0.95 |
| 13 | எஸ்இபி ஏபி டுன்ரா சஸ்டெய்னபல் ப்ரன்டியர் பண்ட் | 9,600,000 | 0.84 |
| 14 | எஸ்.எஸ்.பீ.டீ - ஏ.எல் மெவார் கொமர்ஷல் இன்வெஸ்ட்மெட்ஸ் எல்.எல்.சீ | 8,300,925 | 0.73 |
| 15 | வரையறுக்கப்பட்ட ஜினதாச பிரதர்ஸ் (தனியார்) நிறுவனம் | 7,119,989 | 0.62 |
| 16 | மெலன் வங்கி என் ஏ - அகேடியன் ப்ரன்டியர் மாக்கட்ஸ் இக்குவிடி பண்ட் | 5,519,813 | 0.48 |
| 17 | திருமதி. பீ டி ஏ எஸ் பேருவலகே | 5,347,957 | 0.47 |
| 18 | திரு பி ஏ மஹிபால | 5,141,805 | 0.45 |
| 19 | மெலன் வங்கி என் ஏ - யூபிஎஸ் குரப் டிரஸ்ட் | 4,655,274 | 0.41 |
| 20 | திரு கே ஏ எஸ் ஆர் நிஸ்சங்க | 4,499,664 | 0.39 |
| | | 725,097,906 | 63.36 |
| | பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள் | 2,000,117 | 0.17 |
| | ஏனைய பங்குதாரர்களிடமுள்ள மீதி பங்குகள் | 417,275,932 | 36.47 |
| | மொத்தம் | **1,144,373,955** | **100.00** |

* வரையறுக்கப்பட்ட இந்திரா டிரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளரான திரு. ருஷங்க சில்வா வங்கியின் நிர்வாகி அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளராக செப்டெம்பர் 1ம் திகதி 2017 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி இந்திரா டிரேடர்ஸ் நிறுவனத்தின் பிரதான பங்குதாரரான திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா வங்கியில் வைத்துள்ள பங்கு உரிமையானது பொது மக்களிடம் உள்ள பங்குகளின் விகிதத்தை கணக்கிடும் பொழுது விலக்கப்பட்டுள்ளது.

| திகதியன்று | 30.06.2021 |
|---|---|
| பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை | 31,236 |
| % பொது மக்களிடம் உள்ள பங்குகள் | 90.62% |
| தளம்பல் சீராக்கப்பட்ட சந்தை மூலதனம் | ரூ. 55 பில்லியன் |

பங்கு பட்டியலிடல் விதிகள் பிரிவு 7.13.1 (அ) இன் தெரிவு 1 இற்கு இசைவாக குறைந்தபட்ச பொது பங்குரிமை விகித தேவைக்கு வங்கி இணங்குகிறது

### சம்பத் வங்கி பிஎல்சியில் பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள்

| | | வைத்திருக்கும் பங்குகளின் தொகை | |
|---|---|---|---|
| இல. | பணிப்பாளர்களின் பெயர் | 30.06.2021 திகதியன்று | 31.12.2020 திகதியன்று |
| 1 | திரு. ஹர்ஷ அமரசேக்கர | - | - |
| 2 | திரு. ருஷங்க சில்வா | - | - |
| 3 | திரு. தேசால் டி மெல் | - | - |
| 4 | திரு. டி. கே. டீ. சில்வா விஜயரட்ண | - | - |
| 5 | திருமதி. ஏ. நாணயக்கார | - | - |
| 6 | கலாநிதி ஜே. டீ. வீ. எஸ். வீரவரண | - | - |
| 7 | திரு. வஜிர குலதிலக்க | - | - |
| 8 | செல்வி ஆர் கே ஜயவர்தன | - | - |
| 9 | திரு. வினோத் ஹைஹ்ராமணி (2021 பெப்ரவரி 16ம் திகதி முதல் அமுலாகுமாறு நியமிக்கப்பட்டார்) | 281,129 | ஏற்புடையதன்று |
| 10 | திரு. எம். என். ஆர். பெர்னாண்டோ (முகாமைப் பணிப்பாளர்) | 1,718,988 | 572,996 |
| 11 | திரு. டி ஏ டி வாஸ் குணசேக்கர (குழும பிரதம நிதியியல் அதிகாரி) | - | - |

### நிதியியல் நிலைமைக் கூற்று

| திகதியன்று | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 30-ஜூன் 2021 | 31-டிசம்பர் 2020 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் | 30-ஜூன் 2021 | 31-டிசம்பர் 2020 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் |
| | ரூ 000 | ரூ 000 | % | ரூ 000 | ரூ 000 | % |
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 31,846,425 | 29,053,585 | 9.6 | 31,996,690 | 29,218,921 | 9.5 |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள் | 11,445,496 | 13,335,178 | (14.2) | 11,445,496 | 13,335,178 | (14.2) |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 2,406,958 | 3,228,166 | (25.4) | 2,406,958 | 3,228,166 | (25.4) |
| எதிர் மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 2,827,355 | 4,450,557 | (36.5) | 4,651,624 | 6,231,719 | (25.4) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 672,087 | 2,186,515 | (69.3) | 672,087 | 2,186,515 | (69.3) |
| இலாபம் அல்லது நட்ட கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 7,900,534 | 9,313,628 | (15.2) | 7,900,534 | 9,313,628 | (15.2) |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் | | | | | | |
| - கடன் மற்றும் முற்பணம் | 750,394,300 | 720,215,247 | 4.2 | 783,559,474 | 752,437,782 | 4.1 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 285,548,166 | 275,091,572 | 3.8 | 285,548,166 | 275,125,717 | 3.8 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 45,103,590 | 24,237,803 | 86.1 | 45,103,646 | 24,237,859 | 86.1 |
| துணைக் கம்பனிகளிலான முதலீடு | 3,503,350 | 3,350,774 | 4.6 | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 7,930,038 | 8,126,285 | (2.4) | 15,949,029 | 15,891,415 | 0.4 |
| அருவச் சொத்துக்கள் | 581,027 | 753,615 | (22.9) | 613,917 | 791,689 | (22.5) |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் | 3,890,179 | 3,280,166 | 18.6 | 3,104,950 | 2,905,661 | 6.9 |
| நடப்பு வரி கிடைக்கத்தக்கதாக உள்ளவை | - | - | - | 20,071 | 42,883 | (53.2) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 4,221,934 | 4,634,040 | (8.9) | 4,224,502 | 4,653,496 | (9.2) |
| ஏனைய சொத்துக்கள் | 12,990,407 | 9,013,993 | 44.1 | 14,249,366 | 10,084,799 | 41.3 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,171,261,846** | **1,110,271,124** | **5.5** | **1,211,446,510** | **1,149,685,428** | **5.4** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 2,200,965 | 1,522,402 | 44.6 | 2,292,058 | 1,523,333 | 50.5 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 384,304 | 2,030,947 | (81.1) | 384,304 | 2,030,947 | (81.1) |
| மீள் கொள்வனவு அடிப்படையில் விற்ற பிணைப் பத்திரங்கள் | 9,662,310 | 3,399,896 | 184.2 | 9,509,310 | 2,306,896 | 312.2 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் | | | | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 944,008,293 | 885,724,901 | 6.6 | 960,376,728 | 902,498,739 | 6.4 |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 41,850,474 | 49,052,595 | (14.7) | 49,147,495 | 56,871,506 | (13.6) |
| - கடன்பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 30,112,836 | 30,790,007 | (2.2) | 36,296,982 | 37,078,483 | (2.1) |
| ஓய்வு நலக்காப்பு திட்டங்கள் | 6,855,998 | 6,871,592 | (0.2) | 6,990,808 | 6,988,658 | 0.1 |
| செலுத்த வேண்டிய பங்குலாபம் | 156,180 | 121,270 | 28.8 | 156,180 | 121,270 | 28.8 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 5,696,310 | 4,674,756 | 21.9 | 5,902,512 | 4,792,904 | 23.2 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | - | 1,329,604 | 1,485,302 | (10.5) |
| ஏனைய பொறுப்புக்கள் | 18,179,952 | 18,533,954 | (1.9) | 19,424,014 | 19,572,736 | (0.8) |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,059,107,622** | **1,002,722,320** | **5.6** | **1,091,809,995** | **1,035,270,774** | **5.5** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 47,622,493 | 47,622,493 | - | 47,622,493 | 47,622,493 | - |
| ஒதுக்கங்கள் | | | | | | |
| நியதிச்சட்ட ஒதுக்கங்கள் | 4,450,000 | 4,450,000 | - | 4,635,000 | 4,635,000 | - |
| ஏனைய ஒதுக்கங்கள் | 52,174,045 | 51,287,588 | 1.7 | 55,307,771 | 54,256,381 | 1.9 |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 7,907,686 | 4,188,723 | 88.8 | 12,071,251 | 7,900,780 | 52.8 |
| வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | **112,154,224** | **107,548,804** | **4.3** | **119,636,515** | **114,414,654** | **4.6** |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது | | | | - | - | - |
| **மொத்த பங்கு மூலதனம்** | **112,154,224** | **107,548,804** | **4.3** | **119,636,515** | **114,414,654** | **4.6** |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **1,171,261,846** | **1,110,271,124** | **5.5** | **1,211,446,510** | **1,149,685,428** | **5.4** |
| **எதிர்பார பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்** | **402,079,479** | **482,405,749** | (16.7) | **399,875,480** | **477,967,519** | (16.3) |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ)** | **98.00** | **93.98** | 4.3 | **104.54** | **99.98** | 4.6 |
| விஞ்ஞாபன தகவல்கள் | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 3,988 | 4,048 | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 229 | 229 | | | | |

**அத்தாட்சிப்படுத்துகை**

மேற்படி நிதிக் கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டம் இல 7 இன் தேவைக்கு இணங்கவுள்ளது என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

(கையொப்பமிட்டது)
**அஜந்த டி வாஸ் குணசேக்கர**
நிர்வாக இயக்குனர் / குழும பிரதம நிதியியல் அதிகாரி

கீழே கையொப்பமிட்ட நாங்கள் சம்பத் வங்கி பிஎல்சியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக இருப்பதுடன் நாங்கள் இணைவாக பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துகின்றோம்:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கு இணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
மற்றும்

ஆ) இக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டவை என குறிப்பிடப்பட்டவை தவிர்த்து ஏனையவை வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பமிட்டது)
**ஹர்ஷ அமரசேக்கர**
தலைவர்
2021 ஆகஸ்ட் 12

(கையொப்பமிட்டது)
**நந்த பெர்னான்டோ**
நிர்வாக இயக்குனர்

### தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகள் (நியதிச்சட்ட அறிக்கையிடலுக்கு அமைவாக)

| விபரம் | திகதியன்று 30.06.2021 | திகதியன்று 31.12.2020 | திகதியன்று 30.06.2021 | திகதியன்று 31.12.2020 |
|---|---|---|---|---|
| | வங்கி | | குழுமம் | |
| **ஒழுங்குபடுத்துதல் மூலதன போதுமை (ரூ. 000)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I | 92,916,977 | 96,001,662 | 98,631,793 | 101,544,273 |
| அடுக்கு I மூலதனம் | 92,916,977 | 96,001,662 | 98,631,793 | 101,544,273 |
| மொத்த மூலதனம் | 118,142,461 | 117,233,143 | 124,346,589 | 123,249,506 |
| **ஒழுங்குப்படுத்தல் மூலதனப்போதுமை விகிதம் (%)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 6.5%) | 12.45 | 13.44 | 12.46 | 13.40 |
| அடுக்கு I மூலதனம் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 8.0%) | 12.45 | 13.44 | 12.46 | 13.40 |
| மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 12.0%) | 15.83 | 16.41 | 15.70 | 16.26 |
| **பரிவர்த்தனை விகிதம் % (குறைந்தபட்ச தேவைப்பாடு - 3%)** | 7.00 | 6.94 | 7.21 | 7.13 |

| | திகதியன்று 30.06.2021 | திகதியன்று 31.12.2020 |
|---|---|---|
| | வங்கி | |
| **சொத்துக்களின் தரம் (கடன் பட்டியலின் தரம்)** | | |
| திரண்ட செயற்படா கடன்களின் விகிதம், % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | **5.77** | 6.30 |
| தேறிய செயற்படா கடன்களின் விகிதம் , % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஒதுக்கம் நீங்கலாக) * | **2.58** | 3.45 |
| **இலாபத் தன்மை** | | |
| வட்டி மிகை % | **3.42** | 3.30 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய் (வரிக்கு முன்) % | **1.67** | 1.09 |
| பங்கு மூலதனத்தில் இருந்தான வருவாய் (வரிக்கு பின்) % | **12.91** | 7.58 |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் (ரூ. 000) | 371,856,116 | 344,888,261 |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 20%) | | |
| உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு (%) | 35.08 | 34.98 |
| வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவு (%) | 32.12 | 37.60 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு (ரூ. 000) | 269,058,565 | 240,115,531 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - இலங்கை ரூபா (குறைந்தபட்ச தேவைப்பாடு - 90%) | 275.50 | 424.90 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - அனைத்து நாணய அலகிலும் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 90%) | 203.38 | 293.37 |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு- 90% ) | 146.51 | 144.00 |

* தேறிய செயற்படா கடன்களின் விகிதம் ஆனது இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கனங்களுக்கு இணங்க ஒதுக்கம் நீங்கலாக கணிக்கப்பட்டுள்ளது

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : AA-(lka) (நிலையான) www.sampath.lk

# சம்பத் வங்கி பீ.எல்.சீ.

## 2021 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

(கொழும்பு பங்குச் சந்தையின் சட்டம் 7.4 பிரகாரம்)

கம்பனி பதிவு இலக்கம்: PQ144

## பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

### வங்கி

| 2020 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2020 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,040,000 | 2,993,599 | 807,879 | 43,435,171 | 6,106,642 | 105,005,784 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 3,966,962 | 3,966,962 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | (205,056) | - | - | (205,056) |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | (205,056) | - | 3,966,962 | 3,761,906 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | |
| 2019 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,482,131) | (4,482,131) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | (175) | - | (175) |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | (175) | (4,482,131) | (4,482,306) |
| 2020 ஜூன் 30ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,040,000 | 2,993,599 | 602,823 | 43,434,996 | 5,591,473 | 104,285,384 |

| 2021 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2021 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,450,000 | 2,993,599 | 1,838,203 | 46,455,786 | 4,188,723 | 107,548,804 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,064,687 | 7,064,687 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 166,311 | 713,843 | - | (205,794) | 674,360 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 166,311 | 713,843 | - | 6,858,893 | 7,739,047 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | |
| 2020 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,147,028) | (3,147,028) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,401 | - | 13,401 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 13,401 | (3,147,028) | (3,133,627) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மூலதன சாதனங்களை மதிப்பிடுவதனால் ஏற்பட்ட தேறிய வருமானம் | - | - | - | (7,098) | - | 7,098 | - |
| 2021 ஜூன் 30ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,450,000 | 3,159,910 | 2,544,948 | 46,469,187 | 7,907,686 | 112,154,224 |

### குழுமம்

| 2020 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2020 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,204,000 | 5,962,392 | 807,879 | 43,435,171 | 9,424,692 | 111,456,627 | - | 111,456,627 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 3,996,368 | 3,996,368 | - | 3,996,368 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | (205,056) | - | - | (205,056) | - | (205,056) |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | - | (205,056) | - | 3,996,368 | 3,791,312 | - | 3,791,312 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | | | |
| 2019 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (4,482,131) | (4,482,131) | - | (4,482,131) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | (175) | - | (175) | - | (175) |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | (175) | (4,482,131) | (4,482,306) | - | (4,482,306) |
| 2020 ஜூன் 30ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,204,000 | 5,962,392 | 602,823 | 43,434,996 | 8,938,929 | 110,765,633 | - | 110,765,633 |

| 2021 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | வங்கியின் பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுடைய பங்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | FVOCI ஒதுக்கம் | பொது ஒதுக்கங்கள் | | | | |
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| 2021 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,635,000 | 5,962,392 | 1,838,203 | 46,455,786 | 7,900,780 | 114,414,654 | - | 114,414,654 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - | 7,519,649 | 7,519,649 | - | 7,519,649 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 331,244 | 713,843 | - | (209,248) | 835,839 | - | 835,839 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 331,244 | 713,843 | - | 7,310,401 | 8,355,488 | - | 8,355,488 |
| நேரடியாக பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான வழங்கல்கள் | | | | | | | | | |
| 2020 இறுதி பங்கு இலாபம் : காசு | - | - | - | - | - | (3,147,028) | (3,147,028) | - | (3,147,028) |
| உரிமைக்கோரப்படாத பங்குலாபங்களின் சீராக்கல் | - | - | - | - | 13,401 | - | 13,401 | - | 13,401 |
| பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த மொத்த பங்களிப்புகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மொத்த வழங்கல்கள் | - | - | - | - | 13,401 | (3,147,028) | (3,133,627) | - | (3,133,627) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானகூற்றினூடாக சாதாரண பெறுமதியில் மூலதன சாதனங்களை மதிப்பிடுவதனால் ஏற்பட்ட தேறிய வருமானம் | - | - | - | (7,098) | - | 7,098 | - | - | - |
| 2021 ஜூன் 30ம் திகதியன்று மீதி | 47,622,493 | 4,635,000 | 6,293,636 | 2,544,948 | 46,469,187 | 12,071,251 | 119,636,515 | - | 119,636,515 |

## காசுப்பாய்ச்சல் கூற்று

| ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது | வங்கி 2021 ரூ 000 | வங்கி 2020 ரூ 000 | குழுமம் 2021 ரூ 000 | குழுமம் 2020 ரூ 000 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டிப் பெறுகைகள் | 32,578,969 | 36,996,494 | 35,755,827 | 39,975,098 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (24,690,795) | (30,570,097) | (25,920,867) | (31,897,498) |
| தேறிய தரகுப் பெறுகைகள் | 5,024,772 | 3,695,687 | 5,450,846 | 3,871,675 |
| ஊழியர்களுக்கு செலுத்திய கொடுப்பனவு | (5,272,102) | (4,815,832) | (5,892,374) | (5,276,788) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகள் | (3,103,297) | (2,451,071) | (3,303,278) | (2,559,792) |
| ஏனைய தொழிற்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | 3,041,654 | 2,425,606 | 3,565,471 | 2,686,259 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசு கொடுப்பனவுகள் | (3,532,044) | (3,863,634) | (3,393,102) | (3,932,965) |
| **தொழிற்பாட்டு சொத்துக்கள், பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **4,047,157** | **1,417,153** | **6,262,523** | **2,865,989** |
| **தொழிற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு)/குறைவு** | | | | |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 1,889,682 | 18,545,651 | 1,889,682 | 18,545,651 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் -கடன் மற்றும் முற்பணங்கள் | (27,288,397) | (20,544,772) | (29,088,531) | (24,303,896) |
| ஏனைய சொத்துக்கள் | (4,103,989) | (549,564) | (4,288,488) | (628,844) |
| | **(29,502,704)** | **(2,548,685)** | **(31,487,337)** | **(6,387,089)** |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 638,491 | 1,562,157 | 638,491 | 1,562,157 |
| மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | 6,299,669 | (14,959,566) | 7,239,669 | (15,006,762) |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 59,550,663 | 71,488,769 | 59,372,584 | 71,415,747 |
| கடன் தீர்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | (7,202,473) | (5,725,034) | (7,722,302) | (5,896,572) |
| ஏனைய பொறுப்புக்கள் | (732,585) | (1,591,814) | (767,706) | 1,107,666 |
| | **58,553,765** | **50,774,512** | **58,760,736** | **53,182,236** |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு மூலம் பெற்ற/(செலுத்திய) தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **33,098,218** | **49,642,980** | **33,535,922** | **49,661,136** |
| செலுத்திய வருமான வரி | (1,177,355) | (4,967,100) | (1,251,152) | (5,171,390) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்சல்கள்** | **31,920,863** | **44,675,880** | **32,284,770** | **44,489,746** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (185,231) | (233,347) | (652,511) | (692,148) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற வருவாய் | 1,276 | 2,098 | 18,346 | 2,731 |
| எதிர் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் மூலம் பெற்ற தேறிய காசுப்பாய்சல்கள் | 1,622,645 | (17,506,692) | 1,579,538 | (16,902,049) |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVPL | 1,384,757 | (2,990,023) | 1,384,757 | (2,990,023) |
| கடன் தீர்ப்பனவு செலவுகளில் காட்டப்பட்டுள்ள கடன் பத்திரங்கள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | (9,093,849) | (10,444,301) | (9,059,704) | (10,474,619) |
| நிதிச்சொத்துக்களின் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்- FVOCI | (19,763,746) | (2,833,997) | (19,763,746) | (2,833,997) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | (42,711) | (100,828) | (49,838) | (103,519) |
| நிதிச்சொத்துக்கள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | 160,830 | 1,360 | 160,830 | 1,360 |
| துணைக்கம்பனிகள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | 5,123 | 4,828 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கு செலுத்திய தேறிய காசுப்பாய்சல்** | **(25,910,906)** | **(34,100,902)** | **(26,382,328)** | **(33,992,264)** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்சல்** | | | | |
| கடன் பத்திர வழங்கலின் மூலம் பெற்ற காசு | 6,000,000 | - | 6,000,000 | - |
| கடன் பத்திரங்கள் சார்பாக செலுத்திய காசு | (6,000,000) | - | (6,000,000) | - |
| குத்தகைகடன் அடமானங்களின் மீள்கொடுப்பனவுகள் | - | - | (447,110) | - |
| செலுத்திய பங்கு இலாபம் | (3,147,028) | (4,482,131) | (3,147,028) | (4,482,131) |
| குத்தகை பொறுப்புக்களின் முதல் சார்பான மீள்கொடுப்பனவுகள் | (938,689) | (472,480) | (489,297) | (310,010) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான செலுத்திய தேறிய காசுப்பாய்சல்** | **(4,085,717)** | **(4,954,611)** | **(4,083,435)** | **(4,792,141)** |
| **காலப்பகுதிக்கான தேறிய பெற்ற/(செலுத்திய) காசுப்பாய்ச்சல்** | **1,924,240** | **5,620,367** | **1,819,007** | **5,705,341** |
| **ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **31,944,412** | **24,593,341** | **32,108,832** | **24,725,465** |
| **காலப்பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **33,868,652** | **30,213,708** | **33,927,839** | **30,430,806** |

## தொகுதிக்கடன் தகவல்கள்

**(அ) சந்தைப் பெறுமதி**

| தொகுதிக்கடன்கள் - 2016/2021* | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| நிலையானது - 12.75% | வி/வி | 101.99 | வி/வி | 101.33 | ஏ/த | 101.33 |
| தளம்பல் வீதம் | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | ஏ/த | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| நிலையானது - 13.90% | வி/வி | 114.32 | வி/வி | 114.32 | வி/வி | 114.32 |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | கூடியது (ரூ) | | குறைந்தது (ரூ) | | காலாண்டின் இறுதியில் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 |
| நிலையானது - 9.00% | வி/வி | ஏ/த | வி/வி | ஏ/த | வி/வி | ஏ/த |

வி/வி - விற்கப்படவில்லை
ஏ/த - ஏற்புடையதன்று

**(ஆ) வட்டி வீதம்**

| தொகுதிக்கடன்கள் - 2016/2021* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 12.75% | 12.75% | 12.75% | 12.75% | 12.75% |
| தளம்பல் வீதம் | குறிப்பு 01 | | | |

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 13.90% | 13.90% | 13.90% | 13.90% | 13.90% |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் | கூப்பன் சதவீதம் | விளைத்திறனான சதவீதம் |
| நிலையானது - 9.00% | 9.00% | 9.00% | ஏ/த | ஏ/த |

ஏ/த - ஏற்புடையதன்று

குறிப்பு 01

**தொகுதிக்கடன்கள் - 2016/2021**
அரையாண்டு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய, ஆறு மாத கால திரண்ட திறைசேரி உண்டியல் சதவீதம் கூட்டுக 1.00 சதவீத வருடாந்தம் பெறுமதி, தளம்பல் சதவீதத்திற்கு சமமானது.

* 2021 ஜூன் 10ம் திகதி முதிர்ச்சியடைந்தது

**(இ) ஒப்பீடு செய்யத்தக்க அரச பிணைகளின் வட்டிச் சதவீதம்**

| | 2021 | 2020 |
|---|---|---|
| 3 மாத திறைசேரி உண்டியல் | 5.18% | 5.08% |
| 6 மாத திறைசேரி உண்டியல் | 5.19% | 5.22% |
| 5 ஆண்டு திறைசேரி பிணை | 7.30% | 6.61% |

**(ஈ) நடைமுறை உழைப்பு மற்றும் முதிர்வின் போது உழைப்பு**

| தொகுதிக்கடன்கள் - 2016/2021* | நிலையானது 12.75% | | தளம்பல் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | 12.58% | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | 11.26% | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | நிலையானது 12.50% | |
|---|---|---|
| | 2021 | 2020 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | நிலையானது 12.50% | |
|---|---|---|
| | 2021 | 2020 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | நிலையானது 13.90% | |
|---|---|---|
| | 2021 | 2020 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | 12.16% |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | 9.13% |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | நிலையானது 9.00% | |
|---|---|---|
| | 2021 | 2020 |
| நடைமுறை உழைப்பு | வி/வி | ஏ/த |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | ஏ/த |

வி/வி - விற்கப்படவில்லை
ஏ/த - ஏற்புடையதன்று

* 2021 ஜூன் 10ம் திகதி முதிர்ச்சியடைந்தது

**(உ) விகிதம் - வங்கி**

| | 30.06.2021 | 31.12.2020 |
|---|---|---|
| கடன் உரிமை விகிதம் (%) | 26.2% | 37.0% |
| வட்டிக் காப்பு (தடவை) | 7.1 | 4.0 |
| திரவச் சொத்து விகிதம் (%) (இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைவாக) | 87.0% | 89.5% |

## விளக்கக் குறிப்புகள்

1 2020 ஆம் ஆண்டில் வருடாந்தக் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், கணக்கியல் கொள்கைகளிலோ கணக்கீட்டுப்படுத்தும் முறைமைகளிலோ (கீழே விளக்குறிப்பு 8இல் தரப்பட்டுள்ள விடயங்கள் தவிர) எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.

2 குழும நிதிக்கூற்று அறிக்கைகள், வங்கியினதும் அதன் முற்றிலும் உரித்துடைய துணை நிறுவனங்களான சியப்பத்த பினான்ஸ் பிஎல்சி, சம்பத் சென்டர் லிமிடெடட், எஸ்ஸி சிக்யூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிடெட், சம்பத் இன்போர்மேஷன் டெக்னோலொஜி சொலுஷன்ஸ் லிமிடெட் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது.

3 இக்காலப்பகுதியில் சொத்துக்களின், பொறுப்புக்களின், எதிர்பாராத பொறுப்புக்களின் உள்ளடக்கங்களில் எந்தவிதமான பொருண்மை வாய்ந்த மற்றங்களும் ஏற்படவில்லை. அறியப்பட்ட எல்லா செலவினங்களும் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

4 இந்த இடைக்கால நிதிக்கூற்று அறிக்கைகள் இலங்கை கணக்கியல் நியமம் - LKAS 34 (இடைக்கால நிதிக்கூற்றறிக்கையிடல்) க்கு அமைய மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் 7.4 ஆம் விதிக்கமைய தகவல்களை உள்ளடக்கியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5 **பங்குகளின் துணைப்பிரிவு**
பங்குகளின் துணைப்பிரிவின் மூலம் வங்கியின் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது ஒரு (01) சாதாரண பங்கு மூன்று (03) சாதாரண பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 381,457,985 சாதாரண பங்குகளிலிருந்து 1,144,373,955 சாதாரண பங்குகளாக உயர்த்தப்பட்டது. துணைப்பிரிவிற்கு முன்பு இருந்த பங்கு மூலதனத்துக்கும் துணைப்பிரிவுக்குப் பின்னர் கூறப்பட்ட மூலதனத்திலும் எந்தமாற்றமும் இல்லை.
துணைப் பிரிவுக்குப் பிறகு அதிகரித்த பங்குகளின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு பங்குக்கான அடிப்படை / குன்றிய வருவாய் (இபிஎஸ்) மற்றும் வங்கியின் பங்குகொன்றுக்கான தேறிய சொத்து மதிப்பு ஆகியவை இந்நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஒப்பீட்டு காலத்திற்காகச் சரிசெய்யப்பட்டு மீளக் கணிக்கப்பட்டுள்ளன.

6. **பங்கொன்றின் சந்தைப் பெறுமதி**

| | 2021 (ரூ) | 2020* (ரூ) |
|---|---|---|
| ஜுன் 30 ஆம் திகதியன்று சந்தைப் பெறுமதி | **52.60** | 126.40 |
| ஜுன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், அதிகூடிய சந்தைப் பெறுமதி | **56.80** | 130.00 |
| ஜுன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், ஆகக் குறைந்த சந்தைப் பெறுமதி | **48.00** | 96.00 |
| ஜுன் 30 உடன் முடிவடைந்த காலாண்டுப்பகுதியில், நிறையேற்றப்பட்ட சராசரியான சந்தைப் பெறுமதி | **53.07** | 114.85 |

*பங்குகளின் துணைப்பிரிவுக்கு முன் அசல் பங்கு விலை.

7. **நிதிச் சொத்துக்களின் பெறுமான குறைப்பு**
**கடன்கள் மற்றும் முன்னேற்றங்கள்**
கோவிட் -19 தொற்றுநோய் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகத் தொடரும் நிலையில், தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை நீண்ட காலத்திற்கு நீடிக்கும் எனக்கருதலாம். 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உள்ளூர் மற்றும் சர்வதேச பொருளாதாரங்கள் மீட்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டிருந்தாலும், 2021 இரண்டாவது காலாண்டில் பரவிய கோவிட்-19 மூன்றாவது அலையால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் திசைதிருப்பப்பட்டது. அதே நேரம் இலங்கை மத்திய வங்கி சுற்றுலா மற்றும் பயணிகள் போக்குவரத்துத் துறைகளுக்கு வழங்கி இருந்த கடன் சலுகைக்காலத்தை மற்றைய பாதிக்கப்பட்ட துறைகளுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்தது. இந்த அனைத்து காரணிகளையும் மற்றும் தற்போது கைவசமுள்ளத் தகவல்களையும் கருத்தில் கொண்டு, சம்பத் வங்கி 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெருமான குறைப்பு ஏற்பாடுகளை கணக்கிட பயன்படுத்திய அனுமானங்களை மறுபரிசீலனை செய்தது. அதன்படி, வங்கி இந்த காலாண்டில் மிகவும் விவேகமான அணுகுமுறையைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களை, முக்கியமாக தற்போதைய சூழ்நிலைகளினால் வெகுவாக பாதிப்படைந்துள்ள தொழில் துறைகளில் ஈடுப்பட்டுள்ள வாடிக்கையாளர்களை நிலை 2 கடன் அபாய வகையாக வகைப்படுத்தியது (கடன் மீளச் செலுத்துவது சார்பாக அதிக சந்தேகதன்மை கொண்டவர்களாக). மேலும், டிசம்பர் 31, 2020 நிலவரப்படி முகாமைத்துவ தீர்மானத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் பெறுமான குறைப்பானது, கடன் சலுகைக் காலம் முடிவடைந்த பிறகு ஏற்படக்கூடிய இழப்புகளை ஈடுகட்ட காலாண்டில் அதிகரிக்கப்பட்டது. வங்கியின் கடன் மற்றும் வருமதிகள் மீது ஏற்பட கூடிய பாதிப்புகளை தாங்கி கொள்வதற்கு வங்கியிடம் போதுமான அளவு ஏற்பாடுகள் இருப்பதை உறுதி செய்வதற்காக, 2021 ஜுன் 30 ஆம் திகதி வரை நிதிநிலை அறிக்கையில் பெறுமான குறைப்பாக கணிசமான கூடுதல் ஏற்பாடுகளை அங்கீகரிக்க வங்கி மேற்கூறிய விவேகமான நடைமுறைகளைப் பயன்படுத்தியது.

**இலங்கை அபிவிருத்தி முறிகள் / இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகள்**
இலங்கை மத்திய வங்கி, 2021 ஜனவரி 25 திகதியிட்ட 2021 ஆம் ஆண்டின் சுற்றறிக்கை எண் 02 மூலம், வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அரசுப் பத்திரங்களில் முதலீடுகளுக்குக் குறைந்தபட்சம் 10% எல்ஜிடி விண்ணப்பிக்க வங்கிகளுக்கு அனுமதி அளித்தது (அதாவது இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகள்). இருப்பினும், 2020 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட விகிதத்திலிருந்து விலகாமல் எல்ஜிடி விகிதத்தை 20% ஆக பயன்படுத்துவதை வங்கி தேர்வு செய்தது.

8. **வருமான வரி விகிதத்தை 28% இலிருந்து 24% ஆக மாற்றுவது**
இல. 10 2021ம் ஆண்டு இலங்கை இறைவரித் திணைக்களத்தின் திருத்தச் சட்டத்திற்கு இணங்க, வங்கி/குழுமம் திருத்தப்பட்ட 24% 2021 ஜுன் 30 ஆம் திகதி நிலவரப்படி வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி இரண்டையும் கணக்கிடுவதற்காகப் பயன்படுத்தியது. ஒப்பீட்டு காலங்களுக்கான வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரிகள் 28% என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டன.

9. நிதி அறிக்கைகளில் சரிசெய்தல் அல்லது விளக்க குறிப்பொன்றை தருவிப்பதற்கான பொருண்மை வாய்ந்த மாற்றங்கள் எதுவும் அறிக்கையிடல் திகதிக்கு பின்னர் ஏற்படவில்லை.

10. **மூலதனச் சந்தைகள் வழியாக திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு**

10.1 **2021 கடன் பத்திரங்கள் வழியாக திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு**

| நோக்கம் இல. | நிதி திரட்டப்பட்டதற்கான நோக்கம் | நிதி திரட்டப்பட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை | திரட்டப்பட்ட நோக்கத்திற்கு நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி | திரட்டப்பட்ட நிதியில் ஒதுக்கப்படடுள்ள தொகை (A) | திரட்டப்பட்ட நிதியின் % ஆக | திரட்டப்பட்டுள்ள நிதியில் நோக்கத்திறகாக பயன்படுத்தப்பட்டுள்ள தொகை (B) | ஒதுக்கப்பட்ட தொகைக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட தொகை (B/A) | முழுமையாக பயன்படுத்தப்படாவிடில் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடன் மற்றும் வருமதிகளை அதிகரிப்பதற்கு | ரூ. 6.0 பில் | 12.10.2021 | ரூ. 6.0 பில் | 100% | ரூ. 6.0 பில் | 100% | முழுமையாக பயன்படுத்தப்பட்டது |
| 2 | வங்கியின் அடுக்கு II மூலதனத்தை அதிகரிப்பதற்கு | ரூ. 6.0 பில் | 12.04.2021 | ரூ. 6.0 பில் | 100% | ரூ. 6.0 பில் | 100% | முழுமையாக பயன்படுத்தப்பட்டது |

10.2 **முந்தைய ஆண்டுகளில் திரட்டப்பட்ட நிதி**
முந்தைய ஆண்டுகளில் மூலதனச் சந்தைகள் வழியாக திரட்டப்பட்ட நிதி கூறப்பட்ட நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

பிட்ச் தரப்படுத்தல் : AA-(lka) (நிலையான)    www.sampath.lk

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

JEBZ

# சம்பத் வங்கி தனது ஏரிஎம் வலையமைப்பினூடாக இலங்கையில் முதல்முறையாக இயந்திரத்தைத் தொடாமல் பணம் மீளப்பெறும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது

சம்பத் வங்கி இலங்கையில் முதல் முறையாகவும், குறிப்பாக பிராந்தியத்தில் முதல் முறையாகவும் அமைய வாய்ப்புள்ளதாக தன்னியக்க ரெலர் இயந்திரங்களில் (ஏரிஎம்) அவற்றைத் தொடாமல் பணத்தை மீளப்பெறும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

நிதி, மூலதனச் சந்தை அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால், சம்பத் வங்கி தலைமை அலுவலக வளாகத்தில் இந்த சேவையை அறிமுகப்படுத்தி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளார். சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான ஹர்ஷ அமரசேகர, சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரான நந்த பெர்னாண்டோ, சம்பத் வங்கியின் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரியான அஜித் சல்காது மற்றும் சம்பத் வங்கியின் சர்வதேச வாணிபம் மற்றும் கடன் கட்டுப்பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளரான அயோத்ய இதவெல ஆகியோர் முன்னிலையில் அவர் இயந்திரத்தை தொடாமல் பணத்தை மீளப்பெறும் முதலாவது பரிவர்த்தனையை மேற்கொண்டார்.

## இலங்கைக்கு முதன்முதலாக ஏரிஎம் வசதியை அறிமுகப்படுத்தியிருந்த வங்கியிலிருந்து மற்றொரு முதல்முறையான புத்தாக்கம்

சம்பத் வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் நாட்டின் ஏனைய அனைத்து வங்கிகளின் வாடிக்கையாளர்களும் சம்பத் WePay செயலியைப் பயன்படுத்தி ஏரிஎம் திரையில் காண்பிக்கப்படும் பொது விரைவுத் தகவல் குறியீட்டை (QR) ஸ்கேன் செய்வதன் மூலம் நாடு முழுவதுமுள்ள எந்த சம்பத் வங்கி ஏரிஎம் மூலமாகவும் தங்கள் கணக்குகள் மற்றும் அட்டைகளிலுள்ள நிதியை மீளப்பெற முடியும்.

ஏரிஎம்மின் மேற்பரப்பை உடல் ரீதியாகத் தொடும் தேவையை நீக்கி, இது அபாயத்தைக் குறைக்கவும் வாடிக்கையாளர் பாதுகாப்பை மேம்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போதைய உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின்போது ஏரிஎம்களிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கான சிறந்த வழியாகும்.

இது சம்பத் வங்கியால் இலங்கை சந்தையில் அறிமுகம் செய்யப்பட்ட மற்றொரு முன்னோடியான டிஜிட்டல் தீர்வு. 1988 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் பன்முக-மைய ஏரிஎம் வலையமைப்பின் அறிமுகம் அடங்கலாக சம்பத் வங்கி அதன் தொடக்கத்திலிருந்தே பல புத்தாக்கங்களை சந்தையில் அறிமுகம் செய்து வந்துள்ளது.

இந்நிகழ்வு குறித்து நிதி, மூலதனச் சந்தை அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால் கருத்து வெளியிடுகையில், "தொற்றுநோய் பரவி வருகின்ற இக்காலப்பகுதியில் எமது பிரஜைகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்கும் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்ற நிலையில், நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளினதும் வாடிக்கையாளர்கள் பணத்தை மீளப்பெறுவதை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்கு இடமளிக்கும் காலத்தின் தேவையான ஒரு புத்தாக்கமாக இயந்திரத்தைத் தொடாமல் பணத்தை மீளப்பெறும் வழிமுறையை அறிமுகப்படுத்தியுள்ள சம்பத் வங்கிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பிராந்தியத்திலேயே அநேகமாக இதுவே முதன்முறையாக இத்தகைய ஒரு தீர்வாக அமைய வாய்ப்புள்ளதாகவும் எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறாயின் உண்மையிலேயே நாம் அனைவரும் பெருமைப்படவேண்டிய ஒரு நிகழ்வாகும் என்பதில் ஐயமில்லை. இந்த உலகளாவிய சுகாதாரம் மற்றும் நிதியியல் நெருக்கடி ஏற்படுத்தியுள்ள சவால்களை நாம் முறியடிக்க உதவுவதற்கு ஒருமித்த தேசமாக இத்தகைய புத்தாக்கமான தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கு தொடர்ந்தும் உழைப்போம்" என்று குறிப்பிட்டார்.

"நாங்கள் மிகவும் புத்தாக்கமான டிஜிட்டல் வங்கிச்சேவை தீர்வுகளை உருவாக்கி அறிமுகப்படுத்தும் பணிகளை முன்னெடுத்துவரும் நிலையில், சில பரிவர்த்தனைகளுக்கு பணத்தை மீளப் பெறுவதற்கான தேவை எப்போதும் இருக்கும் என்ற உண்மையை நாங்கள் அறிவோம். இதை கருத்திற்கொண்டு தொடுகையின்றி பணத்தை மீளப் பெறுவதன் மூலம் எங்களின் ஏரிஎம்களில் பணம் எடுப்பதற்கான பாதுகாப்பான தொடுகை இல்லாத வழிமுறையை அறிமுகப்படுத்துவது எங்கள் பாக்கியம். இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் இத்தகைய முதல் தீர்வு இதுவாக மாறியுள்ளது" என்று சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரான நந்த பெர்னாண்டோ கூறினார்.



நிதி, மூலதனச் சந்தை அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால், சம்பத் வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் முதலாவது தொடுகையின்றிய பணம் மீளப்பெறல் பரிவர்த்தனையை மேற்கொள்ளும் காட்சி.

"சம்பத் வங்கி வாடிக்கையாளர்களும் மற்றும் நாட்டின் ஏனைய அனைத்து வங்கிகளின் வாடிக்கையாளர்களும் இனி ஏரிஎம் மேற்பரப்பை தொடாமல், சம்பத் WePay செயலியைப் பயன்படுத்தி ஏரிஎம் திரையில் பொது விரைவுத் தகவல் குறியீட்டை (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் தங்கள் பணத்தை மீளப் பெற முடியும். அனைத்து இலங்கை மக்களும் தங்கள் வங்கிக் கணக்குகள் மற்றும் அட்டைகளிலிருந்து குறிப்பாக இந்த உலகளாவிய தொற்றுநோய் நிலைமையின் போது, பணத்தை மீளப்பெறும்போது சம்பத் WePay மூலம் இயந்திரத்தைத் தொடாமல் பணத்தை மீளப்பெறும் பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தைப் பயன்படுத்துமாறு அழைக்கிறோம்" என்று அவர் மேலும் கூறினார்.

எந்தவொரு சம்பத் வங்கி ஏரிஎம் இலும் இயந்திரத்தைத் தொடாமல் பணத்தை மீளப்பெற, அவர்கள் சம்பத் WePay செயலியில் (QR) ஐத் தேர்ந்தெடுத்து ஏரிஎம் திரையில் காண்பிக்கப்படும் தனித்துவமான (QR) குறியீட்டை ஸ்கேன் செய்து, மீளப்பெறும் தொகையை உள்ளிட்டு, பணத்தை மீளப்பெறுகின்ற கணக்கு அல்லது அட்டையைத் தேர்ந்தெடுக்கவும். வாடிக்கையாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் அவரது கோரிக்கையை இந்த கட்டமைப்பு நடைமுறைப்படுத்துகிறது. தொடர்புடைய கணக்கு அல்லது அட்டைக்கணக்கில் பற்றுவைத்து, ஏரிஎம் மூலம் கோரப்பட்ட பணத்தை கிட்டத்தட்ட உடனடியாக பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றது. ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தனித்துவமான (QR) குறியீட்டை ஸ்கேன் செய்யவேண்டியது அவசியம். ஆகையால், வாடிக்கையாளர் ஏரிஎம் மையத்திற்குச் செல்லவேண்டியது அவசியமாகிறது. இதனால் கூடுதல் பாதுகாப்பும் உள்ளது. 0112303050 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பயனர்கள் இயந்திரத்தைத் தொடாமல் பணத்தை மீளப்பெறுவது தொடர்பான மேலதிக தகவல் விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

சம்பத் WePay என்பது அனைத்தையும் ஒருங்கே கொண்டுள்ள டிஜிட்டல் பணப்பையாகும். Just Pay வசதி கொண்ட உள்நாட்டு வங்கிகளுடனான அனைத்து வகையான நிதியியல் பரிவர்த்தனைகளையும் பயனர்கள் இதன்மூலமாக நிகழ்நேரத்தில் இணைய பரிவர்த்தனைகளாக மேற்கொள்ள முடியும். Social Share - சமூக வலைப்பின்னல் அடிப்படையிலான நிதிப் பரிமாற்றங்கள், (QR) அடிப்படையிலான கொடுப்பனவுகள், சம்பத் வங்கி மற்றும் மூன்றாம் தரப்பு நிதிப் பரிமாற்றங்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் பலவற்றை மேற்கொள்ள இடமளிப்பதுடன், மிகவும் பரவலாக பிரபலமடைந்துள்ள இச்செயலி பயனர்களை தொடுகை இன்றிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இடமளித்து, அதன் மூலம் தொற்றுநோய் பரவுகின்ற காலகட்டத்தில் தொற்று ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறது.

சம்பத் WePay செயலியை Apple App Store, Google Play Store மற்றும் Huawei AppGallery ஆகியவற்றின் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பயனர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை விபரங்களை உள்ளிட்டு, தாங்களாகவே இதில் பதிவுசெய்து, தங்கள் சம்பத் வங்கி அல்லது வேறு எந்த வங்கியின் கணக்கு, கடன் அட்டை அல்லது டெபிட் அட்டை விபரங்களை உள்ளிடுவதன் மூலம் செயலியில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஆரம்பிக்கலாம். மற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்கள் சம்பத் வங்கி ஏரிஎம்களில் Touch Cash Withdrawals பணம் மீளப்பெறும் வசதியைப் பயன்படுத்த, வாடிக்கையாளர் தகவல் திரட்டு (Know Your Customer - KYC) சம்பிரதாயங்களை பூர்த்திசெய்ய வேண்டும் மற்றும் அவர்களின் சம்பத் WePay பணப்பைகளை மீள்நிரப்ப வேண்டும். சம்பத் வங்கி சம்பத் WePay க்கு வருடாந்த கட்டணம், தரகுப்பணம் அல்லது பரிவர்த்தனை கட்டணம் எதனையும் அறவிடாது.

100 வீதம் உள்நாட்டு வங்கியாகத் திகழ்ந்துவரும் சம்பத் வங்கியானது இலங்கை மக்களின் வாழ்வில் ஆழமாக வேரூன்றியுள்ளது. 1987ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த வங்கி ஒரு அதிநவீன நிதி நிறுவனமாக மாறியுள்ளதுடன், அதன் தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் வணிகத்தில் வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட அணுகுமுறையின் பலனாக இன்றும்

## தொற்றுநோய் நிலைமையின்போது இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளின் வாடிக்கையாளர்களும் பாதுகாப்பாக பணத்தை மீளப்பெறலாம்.

சந்தையில் முன்னிலை வகிக்கும் வங்கியாக தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. சம்பத் வங்கி செயற்பட ஆரம்பித்ததிலிருந்து 'வங்கித்துறையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள' பல புத்தாக்கங்களின் வரிசையில் ஏரிஎம் இயந்திரங்கள் நீடிக்கப்பட்ட வங்கிச்சேவை நேரம் மற்றும் படிவமின்றிய வங்கிச்சேவை என பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். எமது பாரம்பரியங்கள் மற்றும் விழுமியங்களைக் கட்டிக்காத்தவாறு தொழில்நுட்பத்தால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற நிதியியல் சேவைகள் வழங்குனராக தன்னை சீராக வளர்ச்சி காணச் செய்து வருகின்றது.

---

# 37 வருட அரச நிர்வாக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அஸீஸுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சினால் பாராட்டு

*(பைஷல் இஸ்மாயில்)*

கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ் தனது 37 வருட அரச சேவையிலிருந்து கடந்த 2021.08.11ஆம் திகதி ஓய்வுபெற்றார். கடந்த 2021.05.11ஆம் திகதி அவர் 60 வயதைப் பூர்த்திசெய்திருந்த போதிலும், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவருக்கு 03 மாதகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டு கடந்த 2021.08.11ஆம் திகதி ஓய்வுநிலையை அடைந்தார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு முதலமைச்சின் பிரதம கணக்காளர் எம்.ஐ.எம்.முஸ்தபா தலைமையில் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர்களினால் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் மற்றும் அவரின் குடும்பத்தினரை பாராட்டி, கௌரவமும் வழங்கப்பட்டது.



உதுமாலெவ்வை - ஹதீஜா உம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த அஸீஸ், அட்டாளைச்சேனை அல்-முனீறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) என்பனவற்றில் கல்விகற்று பேராதனை பல்கலைக்கழக கலை (சிறப்பு) பட்டதாரியானார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் துறையிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்திலும் அவர் முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளார்.

சுமார் 06 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய அஸீஸ், 1990ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெற்ற அவர், 1990ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டுவரை புத்தளத்திலும், 1993ஆம் ஆண்டு முதல் 2005ஆண்டு வரையான காலப்பகுதியில் தான் பிறந்த ஊரான அட்டாளைச்சேனையில் பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார். அத்துடன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விசேட ஆணையாளராக சுமார் 08 வருடங்கள் கடமையாற்றிய அவர், 2005 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக 2009ஆம் ஆண்டு நியமனம் பெற்று 2012ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். அதே ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக நியமனம் பெற்ற அவர், இம்மாதம் (ஓகஸ்ட்) 11ஆம் திகதிவரை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராகப் பணியாற்றி தனது ஓய்வை அடைந்தார்.

அவரது சேவைக் காலத்தில் புலமைப் பரிசில் பெற்று ஜேர்மனி, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, தென்கொரியா, கம்போடியா, இந்தியா, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகளுக்கும் அவர் சென்றுள்ளார். அரச துறையில் தான் ஆற்றிய பணிகளுக்காக பல்வேறு அமைப்புகளினால் மக்கள் தொண்டன், அகில இலங்கை சமாதான நீதவான், சாமசிறி, தேசமான்ய, சமூகசேவை சிரோண்மணி, தியாக தீபம் போன்ற பட்டங்கள் அவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறந்த தலைமைத்துவம், அறிவுத்திறன், நேர்மை, மனிதாபிமானம், எளிமை போன்ற பல உயர் பண்புகளைக்கொண்டவராக இலங்கை நிர்வாக சேவையில் மூன்று தசாப்தங்களைக் கடந்து நிறைவு செய்துள்ளார்.

சிறுவயது முதல் சமூக சேவையில் அதிக ஈடுபாடுகொண்ட அஸீஸ், அட்டாளைச்சேனை கல்வி வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பு நல்கியுள்ளார். கடந்த 1984ஆம் ஆண்டு 'அட்டாளைச் சேனை கல்வி வட்டம்' சமூகசேவை அமைப்பை ஆரம்பிப்பதிலும், அதனை வெற்றிகரமாக வழிநடத்துவதிலும் அவர் வெற்றி கண்டு அட்டாளைச்சேனை பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக மாலைநேர வகுப்புகளை கல்வி வட்டம் அமைப்பின் மூலம் இலவசமாக நடத்துவதில் தனது நண்பர்களுடன் இணைந்து தீவிரமாகத் தொழிற்பட்டார். இதனால் ஏழை மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் ஊடாக அவரது சமூகப் பணிகள் தொடர்ந்துகொண்டு செல்கின்றன. தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ் இலங்கை நிர்வாக சேவையில் 30 வருடங்கள் நிறைவுசெய்ததையொட்டி கிழக்கு மாகாணத்தில் பல பாராட்டு விழாக் களை பல அமைப்புகள் நடத்தியிருந்தன.

இதன்போது, செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸின் 37 வருடகால சேவை பற்றியும், அவர் கடந்துவந்த பாதை பற்றிய பிரதான உரையை முதலமைச்சின் பிரதம கணக்காளர் எம்.ஐ.எம்.முஸ்தபாவினால் உரையாற்றப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







# கல்முனையில் கொரோனா தீவிரம்; 24 மணிநேரத்தில் 181 பேருக்கு தொற்று!

## முதல் தடவையாக ஆறாயிரத்தைக் கடந்தது நோயாளர் எண்ணிக்கை

## பலியானோர் 134 ஆக அதிகரிப்பு



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ளது. அங்கு முன்னொருபோதும் இல்லாதவாறு ஒரேநாளில் 181 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அத்துடன், மூவர் உயிரிழந்து பலி எண்ணிக்கை 134 ஆக அதிகரித்துள்ளது. இப்புள்ளிவிபரமானது எமது பிராந்தியத்தில் கொரோனா பரவல் எல்லை மீறிச் சென்று, ஆபத்தான கட்டத்தை எட்டியிருப்பதை எடுத்துக்காட்டுகிறது - என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிவரையான 24 மணித்தியாலயத்தில் எமது கல்முனை பிராந்தியத்தில் 181 பேர் புதிதாக கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். ஒரேநாளில் ஆகக்கூடிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து 31 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அத்துடன், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 27 பேரும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 21 பேரும் நிந்தவூர் பிரதேசத்தில் 20 பேரும் சம்மாந்துறை, காரைதீவு பிரதேசங்களில் தலா 11 பேரும் இக்காலப்பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன்படி கல்முனை பிராந்தியத்தில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 6000 ஆக அதிகரித்துள்ளது. இவர்களுள் தற்போது 1300 இற்கு மேற்பட்டோர் வைத்தியசாலைகளிலும் கொவிட் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர். அத்துடன், 4 ஆயிரத்து 100இற்கு மேற்பட்டோர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளை அதிகரிக்கும்போது மேலும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது.

அதேவேளை, மேற்படி காலப்பகுதியில் இப்பிராந்தியத்தில் கொரோனா தொற்று காரணமாக மூவர் உயிரிழந்திருக்கின்றனர். கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவரும் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருமே தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கல்முனை பிராந்தியத்தில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 134 ஆக உயர்ந்துள்ளது.

கண்முன்னே இவ்வளவு உயிரிழப்புகள் ஏற்பட்டும் கொரோனா தொற்றிலிருந்து தம்மையும் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்வதில் பெரும்பாலானோர் அலட்சியப்போக்கில் நடந்துகொள்வதையே அவதானிக்கின்றோம்.

எவ்வளவோ விழிப்புணர்வையும் வழிகாட்டல்களையும் வழங்கியும் கூட இந்த ஆபத்தான கட்டத்தில் வீடுகளில் அடங்கியிருக்க முடியாதோர் எப்போது அடங்குவார்கள் என்று சுகாதாரத்துறையினராகிய நாங்கள் அங்கலாய்க்கின்றோம்.

கொரோனா தம் உயிரைக் காவுகொண்டு ஒரேயடியாக அடங்குவதையா இவர்கள் எதிர்பார்க்கின்றனர் - என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் கவலை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## மட்டு. மாவட்டத்தில் கொரோனா நோயாளர் எண்ணிக்கை உயர்வு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நிலைவரப்படி கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்துக்கொண்டு வருவதாக சுகாதாரப் பிரிவினர் கடுமையாக எச்சரித்துவருகின்ற நிலைமையில், மக்களின் நடமாட்டங்கள் நகர்ப்பகுதியில் கடந்த இரு நாட்களும் அதிகரித்துக் காணப்பட்டமை தொடர்பாக மாவட்ட கொரோனா செயலணியின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது உடனடியாக பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களின் அநாவசியமான நடமாட்டங்கள் காரணமாகவே கொரோனா தொற்று அதிகமாக ஏற்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவேதான் அதிகமானோர் வெளியில் அலைவதை காணக்கூடியதாகவுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் தங்களின் அடையாள அட்டையை காட்டிக்கொண்டு அதிகமானோர் வெளியிடங்களில் சுற்றித்திரிவது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். இதனைத் தடுப்பதற்காக சகல திணைக்களத் தலைவர்களும் தங்களின் ஊழியர்களை வேலைக்கு அழைக்கப்படுவது தொடர்பான உறுதிப்பட்ட கடிதத்துடன்தான் வெளியில் வரமுடியும் என தற்போது மாவட்ட கொரோனா செயலணி தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. இன்றைய நிலைவரப்படி மக்களின் நடமாட்டம் சற்று குறைந்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. இதுதொடர்பான சில படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## தமிழ்த் தேசியத்துக்காக பெரும் பணியாற்றியவர் கௌரிசங்கரி

### மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பென அரியநேத்திரன் அனுதாபம்



(வீரமுனை நிருபர்)

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து 2008இல் நான் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாதென தடை ஏற்படுத்தப்பட்டபோது, அந்தத் தடையை முறியடித்து வெற்றி கண்ட சிரேஷ்ட வழக்கறிஞர் அமரர் கௌரிசங்கரி தவராசாவின் பேரிழப்பை ஈடுசெய்ய முடியாது - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடகச் செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கொரோனா நோய்த் தாக்கத்தால் உயிர்நீத்த சிரேஷ்ட வழக்கறிஞர் கௌரிசங்கரியின் மறைவு தொடர்பான அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கே.வி.தவராசாவின் துணைவியார் அமரர் கௌரிசங்கரி தவராசாவை 2008ஆம் ஆண்டு முதன்முதலில் சந்தித்தேன்.

அப்போது நான் 2004 பொதுத் தேர்தலில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக தெரிவானபோது புலம்பெயர் நாடுகளில் பல அரசியல் பயணங்களை மேற்கொண்டிருந்தேன்.

2008இல் ஜேர்மனியில் பொங்குதமிழ் நிகழ்வொன்றில் நான் உரையாற்றிய பேச்சு தொடர்பாக இலங்கை புலனாய்வு திணைக்களத்தின் 4ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டேன். விசாரணை எட்டு மணித்தியாலங்கள் இடம்பெற்றன. அதில், புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர் மத்தியில் உரையாற்றிய காணொளி ஒளிப்பேழையை இயக்கியபடி நான் தனிநாட்டுக்கு ஆதரவாக பேசியதாக விசாரணை செய்யப்பட்டேன்.

அதன்பின்னர் ஒரு வாரத்தால் வேறொரு நாட்டுக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றபோது எனது கடவுச்சீட்டு வெளிநாடுகள் போக முடியாதவாறு தடையுள்ளதாக திருப்பியனுப்பப்பட்டேன்.

அதனையடுத்து இரண்டு நாட்களால் எனக்கு கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிந்தேன். உடனே என்னை சக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை அண்ணர், க. தங்கேஸ்வரி அக்கா, செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சட்டத்தரணி கௌரிசங்கரி வீட்டுக்கு அழைத்துச்சென்று விபரங்களை எடுத்துரைத்தார்கள்.

கௌரிசங்கரியும் கணவர் கே.வி.தவராசாவும் புலம்பெயர் தேசத்தில் பொங்குதமிழ் நிகழ்வில் நான் பேசிய பேச்சின் ஒளிப்பேழை ஒன்றை தரமுடியுமா என கேட்டனர். அதை சில தினங்களில் பெற்றுக்கொடுத்தேன். அதை இருவரும் கேட்டுவிட்டு வழக்கில் எதிர்கொள்வோம் பயப்படவேண்டாம் என எனக்கு தைரியம் தந்தனர். வழக்கில் இரண்டாவது தவணையில் 2008, டிசம்பர் மாதம் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு நான் மீண்டும் வெளிநாடுகள் செல்வதற்கான அனுமதி கிடைத்ததுடன் குற்றமற்றவர் என வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தீர்ப்பு அறிவித்து மறுநாள் மாவை அண்ணரும் செல்வம் அடைக்கலநாதனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கிஷோரும் நானும் அவரின் இல்லத்திற்குச் சென்று நன்றியறிதலை தெரிவித்து விட்டு, மாவை அண்ணன் கௌரிசங்கரி மற்றும் கே.வி.தவராசா ஆகியோர்களை சந்தித்து வழக்குக்கான செலவுகள் எவ்வளவு என கேட்டார்.

உடன கௌரிசங்கரியும் கே.வி.தவராசாவும் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி எந்தப் பணமும் வேண்டாம், இது தமிழ்த் தேசியத்திற்கு நாம் செய்யும் பெரும் பணி எனக் கூறினர்.

அந்த வழக்கை தாம் எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதையும் கூறினர். அதாவது, இலங்கையில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் இலங்கை அரசின் அமைச்சர் சந்திரசேகரன் உள்நாட்டில் உரையாற்ற முடியுமானால் இலங்கைக்கு வெளியே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுவது தவறு என வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பின் உள்நாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சருக்கு ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்ற வாதத்தை முன்னிறுத்தி இந்த வழக்கை முறியடித்ததாக தெரிவித்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், உறுப்பினர் பதவி இல்லாதபோதும் குற்றப்புலனாய்வினர் 4ஆம் மாடிக்கு எட்டுத் தடவைகள் விசாரணைக்கு அழைத்திருந்தனர். எட்டுத் தடவைகளும் கொழும்பு மாவட்ட இலங்கை தமிழரசு கட்சித் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா என்னை அங்கு அழைத்து சென்றதை மறக்க முடியாது.

ஒரு தடவை இலங்கைத் தமிழரசுக் கட்சி மத்திய குழுக் கூட்டம் கொழும்பில் சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வீட்டில் இடம்பெற்றபோது அமரர் கௌரிசங்கரி தவராசா, எம்மை உபசரித்து அனைவருக்கும் மதிய விருந்துபசாரத்தை மேற்கொண்டு அன்பாக பழகியதையும் இந்த வேளையில் மறக்க முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதானவர்களை வாதாடி விடுதலை பெற்றுக்கொடுத்த வரலாறுகள் எண்ணிலடங்காது. இன்று 63ஆவது அகவையில் கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தால் அவரை காலன் எடுத்தார். அன்னாரின் பிரிவு பேரிழப்பாகும்.

இந்த வேளையில் அன்னாரின் கணவர் சட்டத்தரணி கே.வி.தவராசா தற்போது சிகிச்சைபெற்று வருவதாக அறிகிறோம். கே.வி. தவராசா பூரண சுகம் பெற்று குணமடைய பிரார்த்திப்பதுடன், இறைபதம் அடைந்த கௌரிசங்கரி அம்மையாருக்கு ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகளை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சார்பாகவும் எமது குடும்பம் சார்பாகவும் தெரிவிக்கின்றேன்.

## கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் மூதூரில் கலந்துரையாடல்





கிண்ணியா நிருபர்

கொரோனா பரவலைக் கட்டுபடுத்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மூதூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் மூதூரில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரல திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள நாடாளுமன்ற உறுப்பினரின் மூதூருக்கான இணைப்பாளர் எம்.ஏ.எம்.முபாரக் ஆகியோருடன் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் என்.எம்.ஹஸ்ஸாலி , பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது கொரோனா பரவலை கட்டுப்படுத்தலுக்கான துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் மூதூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நிலவுகின்ற வாகன பிரச்சினையை உடனடியாக தற்காலிகமாக நிவர்த்திக்கும் வகையில் வாகன ஏற்பாடும் செய்யப்பட்டது.

### அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு விசேட வைத்திய நிபுணர் நியமனம்



அட்டாளைச்சேனை

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வாய், தாடை மற்றும் முகம் விசேட வைத்திய நிபுணராக டாக்டர் விராஜ் ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வைத்தியசாலையின் வரலாற்றில் வாய், தாடை மற்றும் முகம் விசேட வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இதனூடாக இப்பிரதேச மக்கள் நன்மையடையவுள்ளனர் எனவும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனீபா தெரிவித்தார்.

இவர் கடந்த திங்கட்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்

### மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மக்களிடம் வேண்டுகோள்



மீராவோடை நிருபர்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும்போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்று அதிகரித்து காணப்படுவதால் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தின் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமாக்கி பொதுமக்களை வீதிக்கு வராமல் வைக்க பல்வேறு தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

பொலிஸாரின் கருத்துப்படி அநேகமான அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களுடைய உத்தியோகபூர்வ அடையாள அட்டையை காட்டி வீதிக்கு வருவதாகவும் இதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஆலோசனைகளை முன்வைத்தார்கள்.

இதற்கிணங்க நாங்கள் சகல திணைக்கள தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம்.

உங்களுடைய அலுவலகத்திற்கு எதிர்வரும் முப்பதாம் திகதிவரை வரவேண்டிய உத்தியோகத்தர்களை தீர்மானித்து விசேடமாக ஒரு கடிதத்தை கொடுத்தால் மாத்திரம்தான் அவர்கள் வீதிக்கு வரலாம்.

எல்லா உத்தியோகத்தர்களுக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு எந்த எந்த உத்தியோகத்தர்கள் வரவேண்டுமோ அவர்களுக்கு மாத்திரம் கொடுத்து இந்தக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் மிக அன்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 52 உத்தியோகத்தர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், பழைய மருத்துவச்சீட்டை வைத்துக் கொண்டு அதைக்காட்டி அதிகளவிலான பொதுமக்கள் வீதிக்கு வருவதாக பொலிஸார் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இதற்கமைய காலை எட்டு மணிதொடக்கம் இரவு எட்டு மணிவரைக்கும்தான் மட்டக்களப்பில் மருந்தகங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இந்தநேரத்தில் உண்மையான, தேவையான நோயாளிகள் மருந்தகங்களை பயன்படுத்தி தங்களது தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன் - என அவர் மேலும் தெரிவித்தார்.



தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள நிலையில் காரைதீவில் நேற்று முன்தினம் அன்ரிஜன் பரிசோதனை இடம்பெறுவதை படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)



# 31இற்குள் வெளியேறாவிட்டால் விளைவுகள் மோசமானதாக இருக்கும்

## பிரிட்டன் - அமெரிக்காவுக்கு தலிபான்கள் எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படைகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் வெளியேறாவிட்டால் விளைவுகள் மோசமானதாக இருக்கும் என்று தலிபான்கள் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொலைபேசியில் ஆலோசனை செய்ததாக வெள்ளை மாளிகை விளக்கமளித்துள்ளது.

காபூல் விமான நிலையத்திலிருந்து இயக்கப்பட்ட 30இற்கும் மேற்பட்ட விமானங்களில் நேற்றுமுன்தினம் (24 மணி நேரத்தில்) சுமார் 16 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என பென்டகன் அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் 31இற்குப் பின்னர் அமெரிக்கா தனது குடிமக்களை வெளியேற்ற அனுமதிக்க முடியாது என்று தலிபான்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து இரவு பகலாக அமெரிக்கா ஆயிரக்கணக்கானோரை வெளியேற்றி வருகிறது. அமெரிக்க விமானங்கள் மூலம் 10,900 பேரும் அதன் 61 நட்பு நாட்டு விமானங்கள் மூலம் 5,900 பேரும் காபூலை விட்டு வெளியேறினர்.

ஓகஸ்ட் 14ஆம் திகதிமுதல் இதுவரை காபூலிலிருந்து சுமார் 53 ஆயிரம் பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் பல ஆயிரம் பேரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையில் அமெரிக்க விமானங்கள் ஈடுபட்டு வருகின்றன. 31ஆம் திகதிக்குள் அனைவரையும் வெளியேற்றிவிடுவோம் என்று ஜோ பைடன் அரசு தெரிவித்துள்ளது.

அத்தோடு, ஆப்கானிஸ்தானிலிருந்து கடைசி அமெரிக்க இராணுவ வீரர் வெளியேறும் வரை அங்கு புதிய அரசு அமையாது என தலிபான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காபூல் விமான நிலையத்தில் நீடிக்கும் குழப்பங்கள், சிக்கலால் அந்நாட்டுக்கு அனுப்பவேண்டிய 500 தொன் மருந்துகள், ஊட்டச்சத்து உணவுகள் ஆகியவற்றை அனுப்ப முடியவில்லை என உலக நலவாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் 3 இலட்சம் பேருக்கு மருந்துகள், உணவுகள் சென்று சேர்வதில் சிக்கல் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அரசு ஊழியர்களைபோலவே முன்னாள் ஜனாதிபதி அஷ்ரப் கனிக்கும், துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சலேஹ்வுக்கும் பொதுமன்னிப்பு அளிப்பதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

**காபூல் விமான நிலையத்தை தாக்க ஐ.எஸ். தீவிரவாதிகள் சதி - உளவுத்துறை எச்சரிக்கை**

**புகலிடம் கோரி 20,000 பேர் தவிப்பு: 33 விமானங்கள் அனுப்பிய அமெரிக்கா**

**போராளிகளிடமிருந்த பஞ்ச்ஷீர் பள்ளத்தாக்கின் 3 மாவட்டங்கள் தலிபான் வசம்**

**ஐ.எஸ். சதி:**

ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையம் மீது ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் தாக்குதல் நடத்தலாம் என்று உளவுத்துறையினர் எச்சரித்துள்ளனர். உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததையடுத்து ஆப்கானில் அமைதி நீடிக்கிறது. இந்நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகள் விமான நிலையத்தைத் தாக்கக்கூடும் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடப்பட்டது.

காபூல் விமான நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் சிலர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. 3 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**காபூலில் 20ஆயிரம் பேர் தவிப்பு**

இதேவேளை, காபூல் விமான நிலையம் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

தலிபான்களுக்கு அஞ்சி இருபதாயிரம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்று புகலிடம் தேடும் நோக்கில் விமான நிலையத்தில் குவிந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களை மீட்பதற்காக அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த சி-17 வகையைச் சேர்ந்த 33 விமானங்கள் காபூலுக்கு விரைந்துள்ளதாக கூறப்படுகிறது. 4 ஜெட் எஞ்சின்களைக்கொண்ட இந்த விமானங்கள் ஒவ்வொன்றும் 400பேரை ஏற்றிச்செல்லும் திறன் படைத்தவையாகும். இதனால் 13 ஆயிரத்துக்கு மேற்பட்டோரை ஆப்கானிஸ்தானிலிருந்து பிற நாடுகளுக்கு வெளியேற்ற முடியும்.

அமெரிக்கப் பிரஜைகள், அமெரிக்காவில் பணியாற்றும் விஸா பெற்றவர்கள், நேட்டோ நாடுகளின் குடிமக்களை மட்டுமே விமான நிலையத்துக்குள் அனுமதிப்பதாகவும், அமெரிக்கப் படையினர், நிறுவனங்களுக்காக பணியாற்றியதால் நாட்டைவிட்டு வெளியேற விரும்புவோரை அனுமதிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் ஜப்பானிய முகமைகளிலும், நிறுவனங்களிலும் உள்ள ஜப்பானியர்கள், அந்த நிறுவனங்களுக்காக பணியாற்றிய பிற நாட்டவர்களை வெளியேற்றுவதற்காக இராணுவப் போக்குவரத்து விமானங்களை அனுப்பவுள்ளதாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

**தலிபான் பிடியில் பஞ்ச்ஷீரின் 3 மாவட்டங்கள்**

கடந்த வாரம் உள்ளூர் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றபட்ட பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கில் 3 மாவட்டங்களை தலிபான்கள் திரும்பவும் பிடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காபூலை கடந்த 15ஆம் திகதி கைப்பற்றிய தலிபான்கள் பின்னர் ஒட்டுமொத்த ஆப்கனும் அவர்களின் கட்டுப்பாட்டில் வந்தாலும், வடக்கிலுள்ள பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு மாகாண பகுதிகளை ஆயுதம் தாங்கிய உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். அதைத் தொடர்ந்து பல இராணுவ ட்ரெக்குகளில் அங்கு சென்ற தலிபான்கள் பானோ, தே சலேஹ், புல்-இ-ஹெசார் ஆகிய மாவட்டங்களை கைப்பற்றியுள்ளனர்.

ஆனால், அங்கு போர் நடந்து இந்த மாவட்டங்கள் மீட்கப்பட்டனவா என்பது குறித்து தகவல் எதுவும் இல்லை. பஞ்ச்ஷிரில் முன்னாள் சோவியத் எதிர்ப்புப் போராளி அகமது ஷா மசூதின் மகன் மசூத் மற்றும் பதவியிழந்த துணை ஜனாதிபதி சலேஹ் ஆகியோர் தலைமையில் தலிபன் எதிர்ப்புக் குழுக்கள் இணைந்து கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பஞ்ச்ஷீர் பள்ளத்தாக்கு பகுதியில் தலிபானுடன் இராணுவத்தினர் கடும் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலிபான்களின் வாகனங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வீடியோ காட்சியொன்றை ஆப்கான் இராணுவத்தினர் வெளியிட்டுள்ளனர்

பஞ்ச்ஷீர் பகுதி மக்களும் தலிபான்களுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து போரில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# ஆப்கான் மீது பொருளாதாரத் தடை: ஜி-7 நாடுகள் அமைப்பு முடிவு




ஆப்கான் பிரச்சினை, நிதிநிலை குறித்து ஜி-7 நாடுகள் பங்கேற்கும் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தான தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் ஆப்கானிஸ்தான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை ஜி-7 நாடுகள் அமைப்பு விதிக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

**தலிபான்கள் மீது தடை: கனடா பிரதமர் யோசனை**

முன்னதாக ஆப்கானிஸ்தானை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள தலிபான்கள் குழு பயங்கரவாதக் குழு என்பதில் ஐயமில்லை. ஆகையால், அவர்கள் மீது தடை விதிப்பது குறித்து பரிசீலிக்கலாம் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் காணொளி மூலம் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், ஜேர்மன் பிரதமர் ஏஞ்ஜலா மெர்கல், இத்தாலி பிரதமர், ஜப்பான் பிரதமர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்டோர் காணொளி வாயிலாக சந்தித்து ஆப்கன் நிலைவரம் குறித்து ஆலோசித்தனர்.

இந்த சந்திப்பு குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய கனடா பிரதமர் ட்ரூடோ, "கனடா எப்போதோ தலிபான்களை பயங்கரவாதிகளாக அறிவித்துவிட்டது. அவர்கள் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றனர். அதனால் அவர்கள் மீது பல்வேறு தடைகளை விதிப்பது குறித்து நிச்சயமாக பரிசீலிக்கலாம்" எனத் தெரிவித்தார்.

அதேபோல், ஜி-7 மாநாட்டை ஒருங்கிணைக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பிரிட்டனும், "தலிபான்கள் மீது உலக நாடுகள் ஏற்கனவே பல்வேறு தடைகளை விதித்துள்ளன. அதை விலக்குவதா? வேண்டாமா? என்பது குறித்து தலிபான்களின் போக்கை வைத்தே கணிக்க முடியும்" என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஜி-7 மாநாட்டில் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் நாளை ஓகஸ்ட் 31ஐ தாண்டி நீடிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. ஆனால், ஓகஸ்ட் 31ஐ தாண்டி மேற்கத்திய படைகள் காபூலில் இருக்கலாம் என்று நினைத்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தலிபான்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதி தலிபான்கள் ஆப்கானிஸ்தானை தங்களின் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அங்கு என்ன மாதிரியான ஆட்சி அமைப்பது என்பது குறித்து அவர்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர். ஆட்சி அமைப்பதில் தேவையான உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாக சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

**எல்லைகளை திறக்கவேண்டும்**

இதேவேளை, தலிபான்களிடமிருந்து தப்பித்து வர முயலும் ஆயிரக்கணக்கான ஆப்கானியர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் வகையில், அண்டைநாடுகள் தங்களது எல்லைகளை திறந்து வைத்திருக்க வேண்டும் என ஐ.நா. அகதிகளுக்கான தூதர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போதைய சூழலில் தப்பிவரும் ஆப்கன் மக்களை அகதிகளாக அண்டைநாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டதாக ரஷ்ய செய்தி நிறுவனமான ஸ்புட்னிக் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஆப்கானியர்களை மீட்டுவரும் நிலையில், ஆப்கானிலிருந்து இலட்சக்கணக்கானோர் அகதிகளாக வந்தால், அண்டை நாடுகளுக்கு உதவ சர்வதேச சமூகம் தயாராக இருக்கவேண்டும் எனவும் ஐ.நாவின் இந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

**மோசமடையும் மனிதாபிமான நிலை**

ஆப்கானிஸ்தானில் நிலவும் வறட்சி, உடனடியாக வரவுள்ள குளிர்காலம், கொவிட் பெருந்தொற்று மற்றும் ஆட்சி மாற்றம் ஆகியவற்றால் அங்கு மனிதாபிமான நிலை மேலும் மோசமடையும் என ஐ.நாவின் குழந்தைகளுக்கான அமைப்பான யுனிசெப் கவலை தெரிவித்துள்ளது.

யுனிசெப் இயக்குநர் ஹென்ரிட்டா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் ஏற்கனவே ஒரு கோடி குழந்தைகள் மனிதாபிமான உதவிகளுடன்தான் வாழ்ந்து வருகின்றன. இந்த ஆண்டு 10 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. 22 இலட்சம் சிறுமிகள் உட்பட 42 இலட்சம் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளனர். ஆப்கான் குழந்தைகள் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இது. தற்போதைய அரசியல் மாற்றங்களால் இது மேலும் மோசமடையும்.

இருந்தும் நாங்கள் அங்கு சென்றடைய முடியாத பகுதிகளுக்கும் சென்று உதவிகளை அளிக்க இருக்கிறோம் - என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம்



மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு மெரினா கடற்கரையில் நினைவிடம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முதல்முறையாக சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் முதலமைச்சர் ஸ்டாலின் ஆற்றிய உரையில்,

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் கருணாநிதி நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரூ.39 கோடி செலவில் 2.23 ஏக்கரில் நினைவிடம் அமைக்கப்படும்.

கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனை குறித்து நவீன ஒளிப்படங்களுடன் நினைவிடம் கட்டப்படவுள்ளது. தமிழகத்தின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகித்த கருணாநிதிக்கு சென்னையில் நினைவிடம் கட்டப்படும் - என்று அறிவித்தார்.

மேலும், கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் நிரந்தர தலைப்புச் செய்தியாக இருந்தவர் கருணாநிதி. 70 ஆண்டுகளாக பத்திரிகையாளராக இருந்தவர். போட்டியிட்ட தேர்தலில் எல்லாம் வென்றவர். தோல்வி அவரைத் தொட்டதே இல்லை, வெற்றி அவரைக் கைவிட்டதேயில்லை. தமிழகத்தின் முன்னேற்றத்துக்காக தனது வாழ்நாள் முழுவதும் போராடியவர். கல்வி, சமூக பொருளாதாரத்தில் தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசென்றவர். இந்திய அரசியலை வழிநடத்திய ஞானி.

80 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 60 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர். 5 முறை முதலமைச்சராக இருந்தவர் கருணாநிதி. 13 முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், சென்னைக்கு மெட்ரோ திட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, சென்னையில் வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடியில் திருவள்ளுவருக்கு சிலை, கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அண்ணா நூலகம், நுழைவுத் தேர்வு இரத்து, மாணவர்களுக்கு இலவச பஸ் பயணச் சீட்டு உள்ளிட்ட நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பிதான் கருணாநிதி.

நாட்டில் கருணாநிதிபோல ஓர்அரசியல் தலைவர் இருந்ததே இல்லை - என்று ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

# அமைச்சரவை தீர்மானங்கள்

## 2021.08.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. அமைச்சரவை அமைச்சர்களின் ஒகஸ்ட் மாத சம்பளம் கொவிட் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தல்**

பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கமைய தற்போது நாட்டில் பரவி வரும் கொவிட் - 19 தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் கொவிட் நிதியத்தை வலுப்படுத்துவதற்காகவும் அமைச்சரவை அமைச்சர்களின் ஒகஸ்ட் மாத சம்பளத்தை குறித்த நிதியத்திற்கு அன்பளிப்பு செய்வதற்கு அமைச்சரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

**02. இலத்திரனியல் சுற்றுலா அனுமதி மூலம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 180 நாட்களுக்கு ஒரே தடவையில் விசா வழங்கல்**

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இணையவழி இலத்திரனியல் சுற்றுலா விஸா அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையின் (ETA) மூலம் சுற்றுலா விஸா விண்ணப்பிக்கும் செயன்முறைக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் இலங்கை சுற்றுலா கைத்தொலைபேசி செயலி (Mobile App)இனைப் பயன்படுத்தி இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 180 நாட்கள் வரை செல்லுபடியாகும் சுற்றுலா விஸா அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக 2021.01.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்வரும் வகையில் விஸா கட்டணங்களை அறவிட்டு குறித்த சுற்றுலா விஸா அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

சார்க் நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு – 70 அமெரிக்க டொலர்கள் சார்க் அல்லாத நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு – 85 அமெரிக்க டொலர்கள் சிங்கப்பூர், மாலைதீவு, சீசெல்ஸ் நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு – 50 அமெரிக்க டொலர்கள் (குறித்த நாடுகளுடன் தற்போதுள்ள இருதரப்பு உடன்படிக்கைகளுக்கமைய).

**03. அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை**

அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்று பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சராக பிரதமரால் அமைச்சரவையின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சுகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள், அரச வணிக நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிடம் காணப்படும் வாகனங்கள் 82,194 ஆகும்.

அவற்றில், 76,661 வாகனங்கள் நடப்பில் இயங்குவதுடன், 5533 வாகனங்கள் இயங்கு நிலையற்றதாகக் காணப்படுகின்றன.

இயங்கு நிலையிலுள்ள வாகனங்களில் 33,931 வாகனங்கள் அமைச்சுகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களிடமும் அரச வணிக நிறுவனங்களிடமும் 26,395 வாகனங்களும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிடம் 16,335 வாகனங்களும் காணப்படுகின்றன.

அவ்வாறே, அரச நிறுவனங்களிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 8,500 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு அவர்களின் பிரத்தியேக மோட்டார் வாகனங்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துகொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தகவல்களைக் கருத்திற்கொண்டு தற்போது இயங்கு நிலையில் அல்லாத வாகனங்களில் திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களைத் துரிதமாக திருத்தம் செய்து பாவனைக்குட்படுத்தவும், திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை முறையான பெறுகைக் கோரலை பின்பற்றி தாமதிக்காமல் அகற்றுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**04. சுகாதாரத்துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மேலதிக நிதி வசதியைப் பெறல்**

மிகவும் பரந்தளவிலான ஆரம்ப சுகாதார சேவைக் கட்டமைப்பு அணுகுமுறையுடன் கூடிய ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் நோக்கில் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் 37.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகவும், 12.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாகவும், மொத்தமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது. நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க மேற்குறிப்பிட்ட தொகையில் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொவிட்-19 நடவடிக்கைகளுக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக கொவிட்-19 தொற்றால் அதிகரித்துவரும் நோயாளர்களை முகாமைத்துவப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை மேற்கொள்வதற்காக சுகாதாரத்துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்கீழ் 125 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடி உடன்பாட்டை எட்டுவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் 2021ஆம் ஆண்டுக்கான இரண்டாம் காலாண்டுக்கான முன்னேற்றம்**

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான கீழ்வரும் தகவல்களை நிதி அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

43 அமைச்சுகளின் கீழ் மொத்தச் செலவு 1000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 319 தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2030ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்படும் குறித்த கருத்திட்டங்களின் மொத்தப் பெறுமதி கிட்டத்தட்ட 7.1 ரில்லியன் ரூபாவாகும்.

இதுவரை அவற்றில் 1.75 ரில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், 2021ஆம் ஆண்டில் 745 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த 319 கருத்திட்டங்களில் அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தி அணுகுமுறையை உறுதிப்படுத்தும் 88 கருத்திட்டங்கள் அடங்குகின்றன.

அதற்கான ஒட்டுமொத்த மதிப்பீட்டு செலவு 2.5 ரில்லியன் ரூபாவாவதுடன், இவ்வருடத்திற்கு கருத்திட்டங்களுக்காக 232 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.




குறித்த கருத்திட்டங்களில் அனைவருக்கும் குடிநீர், 1,00,000 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நூறு நகரங்கள் வேலைத்திட்டம், நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சௌபாக்கியா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம் போன்ற வேலைத்திட்டங்களும் கொவிட்-19 தொற்று நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

நாட்டில் நிலவும் கொவிட்-19 தொற்று நிலைமையால் குறித்த கருத்திட்டங்களுக்காக முதல் அரையாண்டு காலப்பகுதியில் இலக்காகக்கொள்ளப்பட்ட செலவில் 55 வீதமானவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

இக்கருத்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு இயலுமான வகையில் குறைந்த முன்னேற்றங்களைக் கொண்ட கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தவும், குறித்த கால அட்டவணையின் பிரகாரம் கருத்திட்டங்களைப் பூர்த்திசெய்து அவற்றின் பயன்களை பொதுமக்களுக்கு வழங்கும் வகையிலும் கருத்திட்டங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சின் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**06. சமனல வாவி நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு திருத்தம் செய்தல்**

120 மெகாவாற்று இயலளவுடன் கூடிய சமனல வாவி மின்னுற்பத்திக் கருத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 1986ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நீர்த்தேக்கத்திற்கு நீர் நிரப்பும் நடவடிக்கைகள் 1992ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர்த்தேக்கத்தில் நீர்க்கசிவு நிலவுவது குறித்த வருடத்திலேயே அடையாளங்காணப்பட்டதுடன், அது தொடர்பான ஆய்வுக் கற்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டபோதிலும், இதுவரை நீர்க்கசிவு இடம்பெறும் போக்கு கண்டறியப்படவில்லை. குறித்த நீர்க்கசிவால் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 288 மில்லியன் கனமீற்றர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால், சமனல வாவி மின்னுற்பத்தி நிலையத்தால் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த மின்னுற்பத்தி இயலளவு மணிக்கு 405 ஜிகாவாற்றிலிருந்து மணிக்கு 70 ஜிகாவாற்றுக்கு குறைவடைந்துள்ளது. நீர்த்தேக்கத்தின் வலதுகரைப் பிரதேசம் அதிகளவில் சிதைவடைந்து நீர்க்கசிவு ஏற்படக்கூடிய துளைகளுடன் கூடிய சுண்ணக்கல் படை காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளதுடன், நீர்க்கசிவு இடம்பெறும் போக்கு மேலும் அதிகரித்து ஆபத்தான நிலைமையை அடையக்கூடிய வாய்ப்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள சீராக்கல் முறைகள் தொடர்பாக ஆராய்ந்து நீர்த்தேக்கத்திலுள்ள நீரை முற்றுமுழுதாக அகற்றி முழுமையான பரிசோதனையை மேற்கொண்ட பின்னர், நீர்க்கசிவு இடம்பெறும் பகுதியைப் பொருத்தமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மூடுவதற்காக இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. உள்ளூர் சேதன உரக் கொள்முதல் – 2021/2022 பெரும் போகம்**

2021.07.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கமைய 2021/2022 பெரும்போகத்திற்குத் தேவையான சேதன உரம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்வதற்காக தேசிய உரங்கள் செயலகத்தின் அனுமதிப்பத்திர உரிமம் கொண்ட உள்ளூர் உர உற்பத்தியாளர்களிடம் விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்குத் தேவையான சேதன உரத்தை விநியோகிப்பதற்கான பெறுகைக் கோரல்கள், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய தெரிவுசெய்யப்பட்டுள்ள சேதன உர உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1993ஆம் ஆண்டு 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

தற்போது கொவிட் தொற்று உலகளாவிய ரீதியில் பரவியுள்ள நிலைமையில் சர்வதேச இரத்தினக்கல் வர்த்தகத்தில் இரத்தினக்கற்களுக்கு நிலவிய கேள்வி குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. அதனால், தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை இரத்தினக்கல் ஏற்றுமதி நடவடிக்கைகளின்போது அறவிடும் கட்டணத்தில் ஏதேனும் சலுகையைப் பெற்றுத்தருமாறும், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருப்பதால் மெய்நிகர் (Online) வழியாக இரத்தினக்கல் ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறும் இரத்தினக்கல் தொழிற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதற்கமைய, குறித்த கட்டணத்தை திருத்தம் செய்வதற்கும், மெய்நிகர் வழியாக இரத்தினக்கல் மற்றும் தங்காபரணங்களை ஏற்றுமதி செய்வதற்கும் வசதிகளை மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் 1993ஆம் ஆண்டு 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் 2232/36ஆம் இலக்க 2021 ஜூன் மாதம் 18ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. குடியியல் வழக்கு சட்டக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

குடியியல் வழக்கு சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தரப்பினர் ஒருவர் அல்லது தரப்பினர்களுக்கிடையே நிகழும் அல்லது பட்டியல்படுத்தப்பட்ட சட்டத்தரணி மற்றும் சேவை பெறுநருக்கு இடையேயான அனைத்துக் கட்டணங்களும் நீதிமன்றப் பதிவாளரால் நிர்ணயிக்கப்படல் வேண்டும். இதற்கு முன்னர் குறித்த தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ள 994/7ஆம் இலக்க 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள கட்டணத்தை சமகாலத்திற்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்குரிய கட்டளைகள் விதிக்கப்பட்டு 2234/67ஆம் இலக்க 2021 ஜூலை மாதம் 02ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை தற்காலிகமாக முடக்க நேரிட்டமையால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு 2,000 ரூபா கொடுப்பனவு செலுத்தல்**


கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை தற்காலிகமாக முடக்க நேரிட்டமையால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு 2,000 ரூபா கொடுப்பனவு வழங்குவது உகந்ததென அடையாளங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தேவையான நிதி மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், குறித்த கொடுப்பனவுகள் பிரதேச செயலாளர்களால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும். அதற்குத் தேவையான வழிகாட்டல்கள் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு தேவையான மேலதிக நிதியை விடுவிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


**11 கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குத் தேவையான திரவ மருத்துவ ஒட்சிசன் 3,00,000 லீற்றர்களை வாராந்தம் இறக்குமதி செய்தல்**

தீவிர நிலைமையிலுள்ள கொவிட்-19 நோயாளர்களுக்கு திரவ மருத்துவ ஒட்சிசன் வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் 1,20,000 லீற்றர் ஒட்சிசனை மாதாந்தம் இறக்குமதி செய்வதற்கு 2021 மே மாதம் 24ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது பரவிவரும் திரிபடைந்த வைரஸ் காரணமாக ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், போதுமானளவு ஒட்சிசனை நாட்டில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு இயலுமான வகையில் தற்போது மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் 1,20,000 லீற்றர்களுக்குப் பதிலாக வாராந்தம் 3,00,000 லீற்றர் ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

# கொவிட் கட்டுப்பாடு தொடர்பில் கந்தளாயில் கலந்துரையாடல்





கந்தளாய் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் வேகமாக பரவிவரும் கொரோனாவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கந்தளாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கந்தளாய் பிரிவில் வேகமாகப் பரவிவரும் கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதோடு, கந்தளாய் பிரதேச செயலகம் திருகோணமலை மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான கொவிட் நோயாளிகளைக்கொண்ட பிரிவாக காணப்படுகின்றது.

இந்த நிலைமைக்கு முக்கிய காரணம், பொதுமக்களின் கவனக்குறைவு மற்றும் தடுப்பூசிகளின் புறக்கணிப்பு, கொவிட்-19 தொற்றுநோய் குறித்த குறைந்த விழிப்புணர்வு மற்றும் சரியான சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறியமை தொடர்பாக சுகாதார தரப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டது.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி போடுவது கட்டாயமாகும், தடுப்பூசியை தவறவிட்ட யாராவது இருந்தால், அவர்கள் அடையாளங்காணப்பட்டு தடுப்பூசிக்கு பரிந்துரைக்கப்படுவார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டதோடு அடுத்த சில நாட்களில் திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசியை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரள, கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, கந்தளாய் பிரதேச செயலாளர், முப்படையினர் மற்றும் சுகாதார அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


# விசேட அதிரடிப்படையினரால் 9 எம்.எம். கைத்துப்பாக்கி மீட்பு

- பாறுக் ஷிஹான் -

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, காங்கேயனோடை பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்களை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விடுதலைப் புலிகளினால் பாவிக்கப்பட்டதாக நம்பப்படும் வெளிநாட்டு தயாரிப்பான மைக்ரோ 9 எம்.எம். கைத்துப்பாக்கியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

காங்கேயனோடையிலுள்ள வெற்றுக் காணியொன்றில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரி.எம்.எம்.யு.கே.வி. தென்னகோன் தலைமையிலான விசேட அதிரடிப்படைக் குழுவினர் தேடுதலை மேற்கொண்டு கைவிடப்பட்ட நிலையிலிருந்தே



இந்த கைத்துப்பாக்கி மற்றும் மகசின்களை அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

குறித்த காணிக்குள் குறித்த துப்பாக்கியை வீசிவிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில், கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் மகசின்கள் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.



# சாதனையை நோக்கி இன்று களமிறங்கும் பும்ரா

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா 100 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைக்க காத்திருக்கிறார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி எதிர்பாராத வெற்றியொன்றை பதிவுசெய்து தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா இதுவரை 22 டெஸ்ட் போட்டிகளில் 95 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இதற்கு முன்பு இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் 25 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்டை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது. அந்த அடிப்படையில் இன்று ஆரம்பமாகின்ற லீட்ஸ் டெஸ்ட் போட்டியில் ஜஸ்பிரிட் பும்ரா 5 விக்கெட்டுகளை வீழ்த்தி விட்டால் குறைந்த டெஸ்ட் போட்டியில் 100 விக்கெட்டை வீழ்த்திய இந்திய வீரர் என்ற சாதனையை படைப்பார்.

ஜஸ்பிரிட் பும்ரா இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டையும் வீழ்த்தினார். லோர்ட்ஸில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டையும் இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டையும் வீழ்த்தி இரண்டு போட்டிகளை சேர்த்து மொத்தம் 14 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலிக்கை இணைத்துக்கொள்வதில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குள் குழப்பம்



ஏழாவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அனைத்து நாடுகளை சேர்ந்த கிரிக்கெட் சபைகளும் உலகக்கிண்ண தொடருக்கான அணிகளை தேர்வு செய்வதில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதில் நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் ஏற்கனவே தங்களது குழாமை அறிவித்துள்ளன.

இந்நிலையில் பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியின் தேர்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. பாகிஸ்தான் அணியில் பாபர் அஸாமும் மொஹமட் றிஸ்வானும் தொடர்ச்சியாக சிறப்பாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிக்கின்றனர். ஆனால் மத்திய வரிசையில் பிரச்சினை இருக்கிறது.

மத்திய வரிசை சிக்கலுக்கு தீர்வாக அனுபவ சகலதுறை வீரரான ஷோயிப் மலிக்கை அணியில் எடுக்க வேண்டும் என தலைவர் பாபர் அஸாம் தேர்வுக்குழுவிடம் தெரிவித்ததாகவும் ஆனால் தேர்வுக்குழு தலைவர் மொஹமட் வஸீம் 39 வயதான மலிக்கின் உடற்தகுதியை கருத்தில்கொண்டு அவரை அணியில் எடுக்க மறுப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

1999ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தான் அணிக்காக ஆடிவரும் ஷோயிப் மலிக் அணியின் அனுபவ வீரர் ஆவார். 39 வயதான ஷோயிப் மலிக், 21 ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட்டில் ஆடிவருகிறார். குறிப்பாக இருபதுக்கு 20 கிரிக்கெட்டில் மலிக் மிகச்சிறந்த வீரராவார். துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாது, பந்துவீச்சிலும் சிறப்பாக செயற்படக்கூடிய சிறந்த சகலதுறை வீரர் ஆவார்.

இருபதுக்கு 20 கிரிக்கெட் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை விளையாடிவரும் வெகுசில வீரர்களில் மலிக்கும் ஒருவர். 116 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் ஆடிய மலிக்கின் அனுபவம் அணிக்கு தேவை என்கிறார் பாபர் அஸாம். ஆனால் தலைமை தேர்வாளர் மொஹமட் வஸீம் மலிக்கின் உடற்தகுதியை கருத்தில் கொண்டு அவரை அணியில் எடுக்க ஆர்வம் காட்டாததாக தெரிகிறது.

# "சட்டென கோபப்படுவதுதான் அவரது பலவீனம்"

## பயிற்றுவிப்பாளர் குறித்து உஸ்மான் கவாஜா கருத்து



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவராக செயற்பட்ட ஸ்டீவ் ஸ்மித், கடந்த 2018ஆம் ஆண்டு பந்தை சேதப்படுத்திய புகாரில் சிக்கி அவுஸ்திரேலிய அணியின் தலைமை மாற்றப்பட்டதை தொடர்ந்து (அணித்தலைவர்களாக ஆரேன் பிஞ்ச், டிம் பெய்ன், பயிற்றுவிப்பாளராக ஜஸ்டின் லாங்கர்) அந்த அணி தொடர்ச்சியாக தோல்விகளையே தழுவிக்கொண்டு வருகிறது.

நன்றாக விளையாடிய அவுஸ்திரேலிய அணி திடீரென்று படுமோசமாக சொதப்ப ஆரம்பித்ததால் வீரர்களை தனித்தனியாக அழைத்து நிர்வாகம் ஆலோசனை நடத்தியது. அப்போது பல வீரர்கள் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கரை மாற்ற வேண்டும் என பரிந்துரை செய்ததாக தகவல் வெளியானது.

இப்படி ஆஸி. கிரிக்கெட் சபையில் சர்ச்சைகள் தொடர்ந்து வரும் நிலையில், ஆஸி. அணி வீரர் உஸ்மான் கவாஜா பேசியுள்ளார். அவர் தெரிவிக்கையில், தற்போதைய அவுஸ்திரேலிய அணியின் செயல்பாடு ஏமாற்றமளிக்கும் வகையில்தான் இருக்கிறது. முன்புபோல் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பம். பயிற்சியாளர் மீது மட்டும் புகார் கூறுவதைவிட்டு வீரர்களும் பொறுப்புடன் செயல்பட்டு சிறப்பாக விளையாட வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் பேசிய கவாஜா, தோல்விக்கு பயிற்சியாளரை மட்டும் குறை சொல்ல முடியாது. ஜஸ்டின் லாங்கர் பண்பானவர். கிரிக்கெட்டை பெரிதும் விரும்பக் கூடியவர். அனைவரும் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதுதான் அவரின் எண்ணம். அவரிடம் உள்ள பலவீனம் சட்டென கோபப்படுவதுதான். எளிதில் உணர்ச்சி வசப்பட்டுவிடுவார். இதுதான், அவரை கீழே தள்ளிவிடுகிறது. தான் இன்னும் மேம்பட வேண்டும் என அவரே பலமுறை ஒப்புக்கொண்டிருக்கிறார். நான் அவருடன் பேசியிருக்கிறேன். என்னை அவர் அணியிலிருந்து நீக்கிய பிறகும் அவருடன் நெருக்கமாகவே இருக்கிறேன் என தெரிவித்தார்.

# இலங்கையில் நடைபெறவிருந்த கிரிக்கெட் தொடர் ஒத்திவைப்பு

ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறவிருந்த ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரில் ஒருநாள் சர்வதேச தொடர் 2022ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் குளறுபடிகள் காரணமாக இலங்கையில் நடத்தப்படவிருந்த குறித்த ஒருநாள் தொடர், பாகிஸ்தானில் நடத்தப்படும் என குறிப்பிடப்பட்ட போதும், அது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் மனநிலை மற்றும் தொடரினை நடத்தும் போது ஏற்படும் சிக்கல் என்பவற்றினை கருத்திற்கொண்டு தொடர் 2022ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஒத்திவைக்கப்பட்ட குறித்த ஒருநாள் தொடரினை 2022ஆம் ஆண்டில் நடத்த ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளினதும் கிரிக்கெட் சபைகள் இணக்கம் கொண்டிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கு மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.




விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

18ஆவது உலக இளையோர் மெய்வல்லுநர் போட்டிகள்

# பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த கென்யா : இலங்கைக்கு ஏமாற்றம்

WORLD ATHLETICS U20 CHAMPIONSHIPS NAIROBI 21

கென்யாவின் தலைநகர் நைரோபியில் நடைபெற்ற 18ஆவது உலக இளையோர் (20 வயதுக்குட்பட்ட) மெய்வல்லுநர் போட்டிகள் முடிவில் பதக்கப் பட்டியலில் போட்டியை நடத்திய கென்யா முதலிடம் பிடித்தது. 8 தங்கம், 1 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 16 பதக்கங்களை வென்று கென்யா முதலிடம் பிடித்தது.

குறித்த பதக்கப் பட்டியலில் 4 தங்கப் பதக்கங்கள், 1 வெள்ளிப் பதக்கம் அடங்கலாக மொத்தமாக 5 பதக்கங்கள் வென்ற பின்லாந்து இரண்டாவது இடத்தையும் 4 தங்கப் பதக்கங்கள் 3 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 7 பதக்கங்கள் வென்ற நைஜீரியா மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

மெய்வல்லுநர் விளையாட்டுக்குப் பெயர்போன எத்தியோப்பியா (3 தங்கம், 7 வெள்ளி, 2 வெண்கலம்) மற்றும் ஜமைக்கா (3 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலம்) ஆகியன முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களையே பெற்றுக்கொண்டன.

இலங்கை சார்பாக 7 வீர வீராங்கனைகள் பங்கேற்றிருந்த இந்தப் போட்டியில் இலங்கையால் எந்தவொரு பதக்கத்தையும் வெல்ல முடியவில்லை. எனினும் சிறந்த சில போட்டி நிகழ்வுகளில் இலங்கை தனிப்பட்ட சிறந்த நேரப் பெறுதிகளை பதிவு செய்துகொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.




MEDAL TABLE

| RANK | COUNTRY | Gold | Silver | Bronze | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | Kenya | 8 | 1 | 7 | 16 |
| 2 | Finland | 4 | 1 | 0 | 5 |
| 3 | Nigeria | 4 | 0 | 3 | 7 |
| 4 | Ethiopia | 3 | 7 | 2 | 12 |
| 5 | Jamaica | 3 | 6 | 2 | 11 |
| 6 | South Africa | 3 | 2 | 4 | 9 |
| 7 | Botswana | 3 | 1 | 0 | 4 |
| 8 | Sweden | 3 | 0 | 0 | 3 |




# நியூஸிலாந்து வீரரை ஒப்பந்தம் செய்த ராஜஸ்தான் ரோயல்ஸ்



14ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரானது கொரோனா அச்சுறுத்தலால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையில், எஞ்சிய போட்டிகள் செப்டெம்பர் 19 முதல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளன. வெளிநாட்டு வீரர்கள் சிலர் ஆடாததால் எஞ்சிய போட்டிகள் அந்த அணிகளுக்கு கடும் சவாலாக இருக்கும். வெளிநாட்டு வீரர்கள் விலகியதால் கடும் பாதிப்பை சந்தித்திருப்பது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தான். ஜொஸ் பட்லர், பென் ஸ்டோக்ஸ், ஜொஃப்ரா ஆர்ச்சர் ஆகிய 3 இங்கிலாந்து வீரர்களையே அதிகமாக சார்ந்திருந்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜொஃப்ரா ஆர்ச்சர் ஆகிய இருவரும் ஏற்கனவே விலகிய நிலையில், ஜொஸ் பட்லரும் விலகினார். ஜொஸ் பட்லருக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவுள்ளதால் அவர் எஞ்சிய போட்டிகளில் ஆடமாட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலையில் வெளிநாட்டு துடுப்பாட்ட வீரர் ஒருவர் தேவை என்பதால் நியூஸிலாந்தின் அதிரடி துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான க்ளென் ஃபிலிப்ஸை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. நியூஸிலாந்து வீரரான க்ளென் ஃபிலிப்ஸ் 25 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடி 506 ஓட்டங்களை 149.70 என்ற ஸ்டிரைக் ரேட்டில் அடித்துள்ளார். இவரை தேர்வு செய்தது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு பலனளிக்கும் விதமான நல்ல தேர்வு என கருதப்ப டுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7